**கவனிக்க.**- 2026.04.24 ஆந் திகதிய 2486 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2487 - 2026 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.04.30

2487 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும்  வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1102 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1130 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மே மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1099 - B 82787- 403 (2026/04)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    - (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    - (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    - (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        - (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        - (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    - (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    - (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    - (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    - (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    - (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    - (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    - (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    - (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    - (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    - (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

### பயிலுனர் உப பொலிஸ் பரிசோதகர்/விசேட அதிரடிப்படை உப பொலிஸ் பரிசோதகர் (SI/ STF SI) பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் நிலவும் பயிலுனர் உப பொலிஸ் பரிசோதகர்/விசேட அதிரடிப்படை உப பொலிஸ் பரிசோதகர் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. www.police.lk இணையத்தளத்தில் நுழைய எங்களுடன் சேர "(join us)" விருப்பத்தைத் தேர்வு செய்வதன் மூலம் (Click செய்து) அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீடு ஸ்கேன் (Scan) மூலம் கீழே சேர்க்கப்பட்டுள்ள நிகழ்நிலை முறையின் மூலம் (Online) மட்டும் அதிகாரபூர்வமாக 2026.06.05 ஆந் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும் அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்ப முடியாது முதன்மை சோதனைக்காக வருகை தரும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொண்டு வர வேண்டும். (பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தை கையொப்பம் இட்டு கொண்டு வர வேண்டும்.)

(அ) இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படின், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(இ) இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக என்னால் தீர்மானிக் கப்படும்.

(ஈ) பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய, முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப் பட்ட பின் இவ் வர்த்தமானி அறிவித்தல் இரத்தாகும்.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்கு முறைக்கு அமைய நேர்முகப் பரீட்சை நடாத்தப் படும்.

03. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) பயிலுனர் உப பொலிஸ் பரிசோதகர்**

ரூபா 55,410 – 7x670 – 2x890 – 25x1,190 – ரூபா 91,630.00 (RS 03-2025)
10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவு களும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00
(ஆ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00
(இ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 13,440.20
(ஈ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 31,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பனவுகள்

(உ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப் பட்டதன் பின்) - ரூபா 2,000.00
(ஊ) தீபகற்ப கொடுப்பனவு (யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மாத்திரம்) - ரூபா 3,000.00
(எ) சிகரட் கொடுப்பனவு (நடவடிக்கை வலயங்களுக்காக) - ரூபா 500.00

**சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) பயிலுனர் விசேட அதிரடிப்படை உப பொலிஸ் பரிசோதகர் பதவி**

ரூபா 55,410 – 7x670 – 2x890 – 25x1,190 – ரூபா 91,630.00 (RS 03-2025)

10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ் உத்தியோகத்தர்கள் 2022.12.15 ஆம் திகதிய CRTM 260, RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவுகளும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00
(ஆ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00
(இ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 13,440.20
(ஈ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 31,800.00
(உ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு - ரூபா 2,000.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பனவுகள்

(எ) தீபகற்ப கொடுப்பனவு (யாழ்ப்பாண தீபகற்பத் திற்கு மாத்திரம்) - ரூபா 3,000.00

(ஏ) சிகரட் கொடுப்பனவு (நடவடிக்கை வலயங் களுக்காக) - ரூபா 500.00

(ஐ) திருமண கொடுப்பனவு (திருமணமான அதிகாரி களுக்கு) - ரூபா 300.00

இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி/ விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி

(அ) போக்குவரத்து வசதிகள்

(ஆ) உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளில் கூட சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்)

(இ) சீருடை

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க பல்கலைக்கழகங்கள், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கை உயர் கல்வி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பட்டப் படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளைத் தொடர சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

(உ) உத்தியோகத்தர்களது விளையாட்டுத் திறன் மற்றும் இயல்பிலேயே காணப்படுகின்ற திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள்.

(ஊ) கடமை நிமித்தமான பிரயாணச் செலவுகளும், கஷ்டப் பிரதேசச் சேவைகள் மற்றும் சிறந்த கடமை நிமித்தம் வழங்கப்படுகின்ற வெகுமதிகள் சார்பில் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து நிதிகளும் வழங்கப்படும்.

04. **தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள் :**

கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தரச் சான்றிதழ் (சாதாரண தர) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

மற்றும் கல்விப் பொது தராதரச் சான்றிதழ் (உயர் தர) தேர்வில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

*குறிப்பு 01* இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தின் பாடங்கள் வகைப்படுத்தலின் படி, பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும், பாட எண் 42 மற்றும் 45 கணிதப் பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும் கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண் ணிக்கை தீர்மானிக்கப்படும்.

*குறிப்பு 02* க.பொ.த (சா/த) பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் எழுத் துப் பரீட்சையில் சித்தியெய்தாது, அப்பாடத்தில் செயன்முறைப் பரீட் சையில் சித்தியெய்தியிருப்பின், அப் பாடத்தில் சித்தி அடையவில்லை என்றே கருதப் படும்.

*குறிப்பு 03* விருப்பத்திற்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள், க.பொ.த (சா/த) பரீட்சை பாடத் திட்டத்தில் அடங்குவதில்லை என்பதால், அப்பாடங்களில் சித்தி யடைந்திருந்தாலும் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த பாட மாகக் கருதப்படமாட்டாது.

4.2 **உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 **ஏனைய தகைமைகள் :**

4.3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.3.2 விண்ணப்பதாரி துர் நடத்தையுடையவரல் லாமல், சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.3.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(விவாகரத்து செய்யப்பட்டவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத குழந்தைகள் உள்ள வர்கள் தகுதியற்றவர்கள்.)

4.3.4 தீவின் எப்பாகத்திலேனும் சேவையாற்று வதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

4.3.5 உயரம் 5 அடி 06 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் (சென்றிமீற்றர் 167.64)

4.3.6 மார்புச் சுற்றளவு 32 அங்குலமாக இருத்தல் வேண்டும். சென்றிமீற்றர் 81.28 (குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

4.3.7 மூக்குக்கண்ணாடி அல்லது தொடு வில்லைகள் இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தபட்ச பார்வைத் திறன் 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும்போது மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.8 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருத்தமற்ற விதத்திலும் கடமைக்குப் பங்கம் ஏற்படும் விதத்திலும் செயற்கை முறையில் உடம்பில் மாற்றங்களைச் செய்திருத்தல் கூடாது.

4.3.9 விண்ணப்பதாரியின் நெருங்கிய உறவினர்கள் (தாய், தந்தை, பாதுகாவலர், நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட திருமணமாகாத அல்லது திருமணமான சகோதரர்கள்/ சகோதரிகள் மற்றும் அவர்களது வாழக்கைத் துணை) எந்தவொரு குற்றச் செயலுக்கும் குற்றவாளிகளாக இல்லாதிருத்தல்.

**குறிப்பு 01** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படு வதற்குத் தேவையான 4:1 மற்றும் 4:4 பந்திகளில் காட்டப்படுகின்ற தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், பந்தி 4:2 மற்றும் 4:3 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற திகதியில் அவ்வாறே இருத்தல் வேண்டும்.

**குறிப்பு 02** மேற்படி ஆட்சேர்ப்பு நடை முறைக்குப் புறம் பொலிஸ் பணி/தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் சிறப்பான விளையாட்டுத் திறமையினைக் கொண்டுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் சம்பந்தமான தகைமையைக் கவனத்திற்கொள்ளாது, ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் நியமன அதிகாரியின் தற்றுணிபின் படி ஆட்சேர்ப்புச் செய்ய முடியும்.

4.4 **வயதெல்லை** :

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 – 25 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
**குறிப்பு** - பொலிஸ் துறை அதிகாரி ஒருவர் விண்ணப்பித்தால், அதிகபட்ச வயது வரம்பு 28 ஆகும்.

05. **ஆட்சேர்ப்பு முறை :**

I. **ஆரம்பப் பரீட்சை :**

விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் இருந்து தகைமைகளையும் வயதெல்லையையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் ஆரம்பப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப் பரீட்சையின் போது மேற்குறித்த பந்தி 4.1, 4.2 மற்றும் 4.4 இல் விபரிக்கப்பட்டுள்ள (4:3:1, 4:3:2, 4:3:4, 4:3:7 மற்றும் 4:3:9 தவிர) தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

II. **உடற்றகுதித்திறன் பரிசோதனை :**

ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்படுகின்ற சபையினால் நடாத்தப்படும் உடற்றகுதித்திறன் பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரிசோதனைக்குத் தோற்றும் வேளையில், அதற்கு முகம்கொடுக்கத் தகுதியானவரென அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தை, இலங்கை வைத்திய சபையில் பதிவுபெற்ற வைத்தியரொருவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| தூரம் ஓடுதல் / Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களுக்குக் குறைவாயின் | 30 |
| | 03 - 04 நிமிடங்களுக்கிடையில் | 20 |
| | 04 - 05 நிமிடங்களுக்கிடையில் | 10 |
| | 5 நிமிடங்களுக்கு மேல் | சித்தியடையவில்லை |
| Chin up (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல்) | தேர்வு செய்த வகைச் செயற்பாட்டை அவதானிப்பதற்கு 30 நொடிகள் ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுதுவதற்கு 120 நொடிகள் | ஒரு செயலுக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

குறிப்பு :1. 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

2. பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பில், மேற்கண்ட பயிற்சிகளில் பெற்ற மொத்த மதிப்பெண்களில் 50% உம், பொலிஸ் சிறப்பு அதிரடிப் படைக்கான ஆள்சேர்ப்பில், மேற்கண்ட பயிற்சிகளில் பெற்ற மொத்த மதிப்பெண்களில் 60% உம் திறனறித் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான கட்-ஆஃப் மதிப்பெண்களாகக் கருதப்படும்.

06. **எழுத்துமூலப் பரீட்சை :**

உடற்றகுதிப் பரிசோதனை நடாத்தப்பட்டு முடிந்த பின்னர் அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சை கீழ்வரும் பாடங்களின் அடிப்படையில் இடம்பெறும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் தேர்ச்சி | 100 | 40 |
| 02. பொது அறிவும் நுண்ணறிவும் | 100 | 40 |

07. **தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுள் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் இறங்கு வரிசைப்படி தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியலின்படி, ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கையின் ஐந்து (5) மடங்கு (1:5) விண்ணப்பதாரிகள் மட்டும் இறுதித் தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தேர்ந்தெடுப்பதற்காக கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 | 40 |
| 2. தொழில் தகைமைகள் | 15 | |
| 3. மொழி ஆற்றல் | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம் / சனசமூக சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையில் காட்டும் திறன் | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **பின்புலப் பரீட்சை :**

08.1 எழுத்துத் தேர்வு மற்றும் திறனறி மதிப்பீட்டு நேர்காணலில் பெற்ற மதிப்பெண்களைச் சேர்த்து, விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப் பெண்களை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அதன் பிறகு, காலியிடங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, காலியிடங்களின் எண்ணிக்கை நிரப்பப்படும் வரை தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் பின் புலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

08.2 விண்ணப்பதாரியின் நடத்தை சம்பந்தமாக அறிந்து கொள்ளும் பொருட்டு, விண்ணப்பதாரியினதும் அவருடைய நெருங்கிய உறவினர்களினதும், அவர் நெருங்கிப் பழகுபவர்களினதும் நடத்தை மற்றும் அவர்கள் எப்படியானவர்கள் என்பது சம்பந்தமாக விண்ணப்பதாரி வசிக்கும் பொலிஸ் நிலையம், பொலிஸ் விசேட பணியகம் மற்றும் அரசாங்க புலனாய்வு சேவை ஊடாக, புலனாய்வு மற்றும் கடுங்கண்காணிப்பு அறிக்கைகள் பெறப்படும். அப்போது, மோசமான பின்னணி அறிக்கைகளையுடைய விண்ணப்பதாரிகள் தகுதி யற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

09. **மருத்துவப் பரிசோதனை:**

மருத்துவப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள், சுகாதாரம் 169 படிவத்தை பூர்த்தி செய்து பொலிஸ் வைத்தியசாலையில் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது, விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்கும், இலங்கையின் எப்பாகத்திலும் கடமை யாற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்குமான, உடல் மற்றும் உளத் தகுதிகளை பரீட்சிப்பதற்காக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படு வார்கள். விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்திய சாலையினால் நடாத்தப்படும் சம்பந்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். சுகாதாரம் 169 படிவம் மற்றும் இலங்கை பொலிஸ் பூர்வ நியமன மருத்துவ இணைப்பு ஆகிய இரண்டு அறிக்கைகளினூடாகவும் உடல், உளத் தகுதி உறுதிப் படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக் காகக் கருத்தில் கொள்ளப்படுவார்கள். மருத்துவப் பரிசோதனைக்கு ஒரு தடவை மட்டுமே உட்படுத்தப் படுவார்கள்.

10. **பயிற்சி :**

10.1 ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரி பொலிஸ்மா அதிபரினால் நிர்ணயிக்கப்படும் திகதியில் பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள்.

10.2 அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்படும்.

10.3 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தொடர்பாக நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். அந்தத் தீர்மானத்தின் படி, அடிப்படைப் பயிற்சி நீடிக்கப்பட்டால், அதே காலப்பகுதிக்குச் சமமான காலப்பகுதியினால் அவர்களின் தகுதிகாண் காலமும் நீடிக்கப்படும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

11.1 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கீழ்க் காணும் குறித்த 11:3 ஆம் பிரிவிற்கு உட்பட்டு மூன்று (03) வருடகால பயிலுனர் சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

11.2 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்யும் வகையில், தற்போது அமுலிலுள்ள மற்றும் எதிர் காலத்தில் வகுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.

11.3 விண்ணப்பதாரிகள், பொலிஸ் கட்டளைச் சட்டத் தின் ஏற்பாடுகள் உட்பட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிபந்த னைகள் மற்றும் சுற்றுநிருபங்கள், தாபன விதிக்கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், இலங்கைப் பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல்கள், பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கைகள், பிற அறிவுறுத்தல் கோவையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

11.4 தகுதிகாண் காலப்பகுதியில் இருக்கும் ஓர் உத்தி யோகத்தர் தொடர்பில், அவரது மிக முக்கியமான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, பொலிஸ்மா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் விசேட அனுமதியிருந்தாலேயொழிய அவ் உத்தியோகத்தருக்கு திருமணம் முடிப்பதற்கு முடியாது. இந்த விதிமுறைகள் மீறப்பட்டால், நியமனம் இரத்து செய்யப்படும்.

11.5 ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், 05 வருட கட்டாய சேவை காலத்திற்கான ஒப்பந்தமொன்றிற்கு வருதல் வேண்டும். இவ் ஒப்பந்தத்திலுள்ள நிபந் தனைகளை மீறும் சந்தர்ப்பங்களில், தற்போதுள்ள

சட்டங்கள் / தாபன விதிக் கோவை / அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.6 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதானது, அவரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகுதியிழக்கச் செய்யும். பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டமை ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. **பதவியின் தன்மை :**

நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்)

13. **பதவியில் நிரந்தரமாக்கல் :**

13.1 தகுதிகாண் காலப்பகுதியில், பயிலுனர் கோப்பொன்று பேணப்படுதல் வேண்டும். தகுதி காண் காலப்பகுதியின் முடிவில், அந்த உத்தியோகத்தர்களின் சேவை நிரந்தரமாக்கப்படுதலானது, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

13.2 தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்பட்ட ஓர் அலுவலரின் நியமனத்தை நிரந்தரமாக்குதல், தகுதிகாண் காலப்பகுதியை நீடித்தல் அல்லது நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தற்போது நடைமுறையிலுள்ள நடைமுறைவிதிகளில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

14. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை :

| *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் தன்மை. எழுத்துப் பரீட்சை / தொழிற்றுறை பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையில் நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப் பதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய் மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப் பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சான்றிதழை பெற்றிருத்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப் பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சான்றிதழை பெற்றிருத்தல் |

15. **மொழித் தேர்ச்சி :**

| *மொழி* | *பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கைகளின் படி உரிய மட்டத்திலான திறனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித்திறனை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

16. இந்த வர்த்தமானியின் பகுதி 1 இன் பத்தி (11A) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தக்கூடிய பொதுவான நிபந்தனைகள் பொருந்தும்.

17. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது வெள்ளை பின்னணியில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படத்தையும் பின்வரும் ஆவணங்களின் நகல்களையும் பதிவேற்ற வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) தேசிய ஆளடையாள அட்டை
(இ) கல்வித் தகுதிகளைச் சான்றாகக் கொண்ட சான்றிதழ்கள்
(ஈ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்
(உ) விண்ணப்பதாரர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பணியிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று கூறும் நிறுவனத் தலைவரின் கடிதம். (ஏற்கனவே பணியமர்த்தப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்.) (விண்ணப்பப்படிவத்தின் படிவ எண். 18 இல் இருக்க வேண்டும்)
(ஊ) நீங்கள் அரசாங்கப் பணி அல்லது ஆயுதப்படைகளை விட்டு வெளியேறியிருந்தால் இராஜினாமா கடிதம்

18. ஏற்கனவே அரசாங்கப் பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப்படிவத்தின் படிவம் எண். 18 இன் கீழ் உள்ள படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட கடிதத்தை, நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் அதிகாரபூர்வ முத்திரையுடன் பதிவேற்ற (Upload) வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ..........................................................................................................................
இவர்................................ திணைக்களம் / நிறுவனத்தின் குழு/யுத்த இராணுவம் படையில் பணியாற்றும் நபர் என்றும், அவர் இந்த பதவிக்கான தேர்வு செய்யப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்று கூறுகிறேன்.

...............................................
நிறுவன தலைவர் கையொப்பம்
பெயர்................................
திகதி ................................ அதிகாரப்பூர்வ முத்திரை

குறிப்பு - பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவு அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ் மாஅதிபர்.

04-353/1

## இலங்கைப் பொலிஸ்

## பயிலுனர் பெண் உப பொலிஸ் பரிசோதகர் (WSI) பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் நிலவும் பயிலுனர் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. www.police.lk இணையதளத்தில் நுழைய எங்களுடன் சேர "(join us)" விருப்பத்தைத் தேர்வு செய்வதன் மூலம் (Click செய்து) அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீடு ஸ்கேன் (Scan) மூலம் கீழே சேர்க்கப்பட்டுள்ள நிகழ்நிலை முறையின் மூலம் (Online) மட்டும் அதிகார பூர்வமாக 2026.06.05 ஆந் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும் அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்ப முடியாது முதன்மை சோதனைக்காக வருகை தரும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொண்டு வர வேண்டும். (பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தை கையொப்பம் இட்டு கொண்டு வர வேண்டும்.)

(அ) இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படின், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(இ) இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக என்னால் தீர்மானிக்கப்படும்.

(ஈ) பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய, முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப் பட்ட பின் இவ் வர்த்தமானி அறிவித்தல் இரத்தாகும்.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்குமுறைக்கு அமைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

03. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) பயிலுனர் பெண் உப பொலிஸ் பரிசோதகர்**

ரூபா 55,410.00 – 7x670 – 2x890 – 25x1,190 – ரூபா 91,630.00 (RS 03-2025)
10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவு களும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00
(ஆ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00
(இ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 13,440.20
(ஈ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 31,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பனவுகள்

(உ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப் பட்டதன் பின்) - ரூபா 2,000.00
(ஊ) தீபகற்ப கொடுப்பனவு (யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மாத்திரம்) - ரூபா 3,000.00
(எ) சிகரட் கொடுப்பனவு (நடவடிக்கை வலயங்களுக்காக) - ரூபா 500.00

இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக,

(அ) போக்குவரத்து வசதிகள்

(ஆ) உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளில் கூட சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்)

(இ) சீருடை

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க பல்கலைக்கழகங்கள், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கை உயர் கல்வி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளைத் தொடர சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

(உ) உத்தியோகத்தர்களது விளையாட்டுத் திறன் மற்றும் இயல்பிலேயே காணப்படுகின்ற திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள்.

(ஊ) கடமை நிமித்தமான பிரயாணச் செலவுகளும், கஷ்டப் பிரதேசச் சேவைகள் மற்றும் சிறந்த கடமை நிமித்தம் வழங்கப்படுகின்ற வெகுமதிகள் சார்பில் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து நிதிகளும் வழங்கப்படும்.

04. **தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள் :**
கணிதம், விஞ்ஞானம், சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தர) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

மற்றும் கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (உயர் தர) தேர்வில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

*குறிப்பு 01* இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின் படி, பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும், பாட எண் 42 மற்றும் 45 கணிதப் பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும் கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

*குறிப்பு 02* க.பொ.த. (சா/த) பரீட்சையில் தொழில் நுட்பப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது, அப்பாடத்தில் செயன் முறைப் பரீட்சையில் சித்தியெய்தி யிருப்பின், அப்பாடத்தில் சித்தி அடைய வில்லை என்றே கருதப்படும்.

*குறிப்பு 03* விருப்பத்திற்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள், க.பொ.த (சா/த) பரீட்சை பாடத்திட்டத்தில் அடங்குவதில்லை என்பதால், அப்பாடங் களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்பட மாட்டாது.

4.2 **உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 **ஏனைய தகைமைகள் :**

4.3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
4.3.2 விண்ணப்பதாரி துர் நடத்தையுடைய வரல்லாமல், சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
4.3.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.
(விவாகரத்து செய்யப்பட்டவர்கள், விதவைகள், மற்றும் திருமணமாகாத குழந்தைகள் உள்ளவர்கள் தகுதியற்றவர்கள்.)
4.3.4 தீவின் எப்பாகத்திலேனும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.
4.3.5 உயரம் 5 அடி 04 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் (சென்றிமீட்டர் 162.56)
4.3.6 மூக்குக்கண்ணாடி அல்லது தொடு வில்லைகள் இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தபட்ச பார்வைத் திறன் 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும்போது மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.
4.3.7 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருத்தமற்ற விதத்திலும் கடமைக்குப் பங்கம் ஏற்படும் விதத்திலும் செயற்கை முறையில் உடம்பில் மாற்றங்களைச் செய்திருத்தல் கூடாது.
4.3.8 விண்ணப்பதாரியின் நெருங்கிய உறவினர்கள் (தாய், தந்தை, பாதுகாவலர், நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட திருமணமாகாத அல்லது திருமணமான சகோதரர்கள்/ சகோதரிகள் மற்றும் அவர்களது வாழக்கைத் துணை) எந்தவொரு குற்றச் செயலுக்கும் குற்றவாளிகளாக இல்லாதிருத்தல்.

*குறிப்பு 01 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படு வதற்குத் தேவையான 4:1 மற்றும் 4:4 பந்திகளில் காட்டப்படுகின்ற தகைமை களை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், பந்தி 4:2 மற்றும் 4:3 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற திகதியில் அவ்வாறே இருத்தல் வேண்டும்.*

*குறிப்பு 02 மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம் பொலிஸ் பணி/தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் சிறப்பான விளையாட்டுத் திறமையினைக் கொண் டுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான திறமையினை வெளிப்படுத்தி யுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் சம்பந்தமான தகைமையைக் கவனத்திற் கொள்ளாது, ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் நியமன அதிகாரி யின் தற்றுணிபின் படி ஆட்சேர்ப்பு செய்ய முடியும்.*

4.4 **வயதெல்லை :**

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 – 25 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு - பொலிஸ் துறையில் பெண் அதிகாரியாக விண்ணப்பிக்கும் பட்சத்தில், அதிகபட்ச வயது வரம்பு 28 ஆகும்.

05. **ஆட்சேர்ப்பு முறை :**

I. **ஆரம்பப் பரீட்சை :**

விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் இருந்து தகைமைகளையும் வயதெல்லையையும் பூர்த்தி

செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் ஆரம்பப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப் பரீட்சையின் போது மேற்குறித்த பந்தி 4.1, 4.2 மற்றும் 4.4இல் விபரிக்கப்பட்டுள்ள (4:3:1, 4:3:2, 4:3:4, 4:3:7 மற்றும் 4:3:9 தவிர) தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

II. **உடற்றகுதித்திறன் பரிசோதனை :**

ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்படுகின்ற சபையினால் நடாத்தப்படும் உடற்றகுதித்திறன் பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரிசோதனைக்குத் தோற்றும் வேளையில், அதற்கு முகம்கொடுக்கத் தகுதியானவரென அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தை, இலங்கை வைத்திய சபையில் பதிவுபெற்ற வைத்தியரொருவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| தூரம் ஓடுதல் / Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களுக்குக் குறைவாயின் | 30 |
| | 03 - 04 நிமிடங்களுக்கிடையில் | 20 |
| | 04 - 05 நிமிடங்களுக்கிடையில் | 10 |
| | 5 நிமிடங்களுக்கு மேல் | சித்தியடையவில்லை |
| Chin up (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Sit up (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல்) | தேர்வு செய்த வகைச் செயற்பாட்டை அவதானிப்பதற்கு 30 நொடிகள் ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுதுவதற்கு 120 நொடிகள் | ஒரு செயலுக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

குறிப்பு : 1. 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

2. பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பில், மேற்கண்ட பயிற்சிகளில் பெற்ற மொத்த மதிப்பெண்களில் 50% உம், திறனறித் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான வெட்டுப்புள்ளி மதிப்பெண்களாகக் கருதப்படும்.

06. **எழுத்துமூலப் பரீட்சை :**

உடற்றகுதிப் பரிசோதனை நடாத்தப்பட்டு முடிந்த பின்னர் அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சை கீழ்வரும் பாடங்களின் அடிப்படையில் இடம்பெறும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் தேர்ச்சி | 100 | 40 |
| 02. பொது அறிவும் நுண்ணறிவும் | 100 | 40 |

07. **தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுள் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் இறங்கு வரிசைப்படி தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியலின்படி, ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கும்

எண்ணிக்கையின் ஐந்து (5) மடங்கு (1:5) விண்ணப்பதாரிகள் மட்டும் இறுதித் தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தேர்ந்தெடுப்பதற்காக கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 | 40 |
| 2. தொழில் தகைமைகள் | 15 | |
| 3. மொழி ஆற்றல் | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம் / சனசமூக சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையில் காட்டும் திறன் | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **பின்புலப் பரீட்சை :**

08.1 எழுத்துத் தேர்வு மற்றும் திறனறி மதிப்பீட்டு நேர்காணலில் பெற்ற மதிப்பெண்களைச் சேர்த்து, விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அதன் பிறகு, காலியிடங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, காலியிடங்களின் எண்ணிக்கை நிரப்பப்படும் வரை தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் பின்புலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

08.2 விண்ணப்பதாரியின் நடத்தை சம்பந்தமாக அறிந்துகொள்ளும் பொருட்டு, விண்ணப்பதாரியினதும் அவருடைய நெருங்கிய உறவினர்களினதும், அவர் நெருங்கிப் பழகுபவர்களினதும் நடத்தை மற்றும் அவர்கள் எப்படியானவர்கள் என்பது சம்பந்தமாக விண்ணப்பதாரி வசிக்கும் பொலிஸ் நிலையம், பொலிஸ் விசேட பணியகம் மற்றும் அரசாங்க புலனாய்வு சேவை ஊடாக, புலனாய்வு மற்றும் கடுங்கண்காணிப்பு அறிக்கைகள் பெறப்படும். அப்போது, மோசமான பின்னணி அறிக்கைகளையுடைய விண்ணப்பதாரிகள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

09. **மருத்துவப் பரிசோதனை :**

மருத்துவப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள், சுகாதாரம் 169 படிவத்தை பூர்த்திசெய்து பொலிஸ் வைத்தியசாலையில் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது, விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்கும், இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்குமான, உடல் மற்றும் உளத் தகுதிகளை பரீட்சிப்பதற்காக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்தியசாலையினால் நடாத்தப்படும் சம்பந்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். சுகாதாரம் 169 படிவம் மற்றும் இலங்கை பொலிஸ் பூர்வ நியமன மருத்துவ இணைப்பு ஆகிய இரண்டு அறிக்கைகளினூடாகவும் உடல், உளத் தகுதி உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்காகக் கருத்தில் கொள்ளப்படுவார்கள். மருத்துவப் பரிசோதனைக்கு ஒரு தடவை மட்டுமே உட்படுத்தப்படுவார்கள்.

10. **பயிற்சி :**

10.1 ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரி பொலிஸ்மா அதிபரினால் நிர்ணயிக்கப்படும் திகதியில் பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள்.

10.2 அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்படும்.

10.3 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தொடர்பாக நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். அந்தத் தீர்மானத்தின் படி, அடிப்படைப் பயிற்சி நீடிக்கப்பட்டால், அதே காலப்பகுதிக்குச் சமமான காலப்பகுதியினால் அவர்களின் தகுதிகாண் காலமும் நீடிக்கப்படும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

11.1 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் குறித்த 11:3 ஆம் பிரிவிற்கு உட்பட்டு மூன்று (03) வருடகால பயிலுனர் சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

11.2 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்யும் வகையில், தற்போது அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் வகுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.

11.3 விண்ணப்பதாரிகள், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் உட்பட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிபந்தனைகள் மற்றும் சுற்றுநிருபங்கள், தாபன விதிக்கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், இலங்கைப் பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல்கள், பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கைகள், பிற அறிவுறுத்தல் கோவையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

11.4 தகுதிகாண் காலப்பகுதியில் இருக்கும் ஓர் உத்தியோகத்தர் தொடர்பில், அவரது மிக முக்கியமான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, பொலிஸ்மா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் விசேட அனுமதியிருந்தாலேயொழிய அவ் உத்தியோகத்தருக்கு திருமணம் முடிப்பதற்கு முடியாது. இந்த விதிமுறைகள் மீறப்பட்டால், நியமனம் இரத்து செய்யப்படும்.

11.5 ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், 05 வருட கட்டாய சேவை காலத்திற்கான ஒப்பந்தமொன்றிற்கு வருதல் வேண்டும். இவ் ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளை மீறும் சந்தர்ப்பங்களில், தற்போதுள்ள சட்டங்கள் / தாபன விதிக் கோவை / அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.6 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதானது, அவரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகுதியிழக்கச் செய்யும். பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டமை ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. **பதவியின் தன்மை :**

நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
(ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்)

13. **பதவியில் நிரந்தரமாக்கல் :**

13.1 தகுதிகாண் காலப்பகுதியில், பயிலுனர் கோப்பொன்று பேணப்படுதல் வேண்டும். தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில், அந்த உத்தியோகத்தர்களின் சேவை நிரந்தரமாக்கப்படுதலானது, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

13.2 தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்பட்ட ஓர் அலுவலரின் நியமனத்தை நிரந்தரமாக்குதல், தகுதிகாண் காலப்பகுதியை நீடித்தல் அல்லது நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தற்போது நடைமுறையிலுள்ள நடைமுறைவிதிகளில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

14. **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை :**

| *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் தன்மை. எழுத்துப் பரீட்சை / தொழிற்றுறை பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையில் நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | பெண் உப பொலிஸ் பரிசோதகர். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பெண் பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப் பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சான்றிதழை பெற்றிருத்தல் |

| *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் தன்மை. எழுத்துப் பரீட்சை / தொழிற்றுறை பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பெண் பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சான்றிதழை பெற்றிருத்தல் |

15. **மொழித் தேர்ச்சி :**

| *மொழி* | *பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித்திறனை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கைகளின் படி உரிய மட்டத்திலான திறனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

16. இந்த வர்த்தமானியின் பகுதி 1 இன் பத்தி (11A) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட அரசு சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தக்கூடிய பொதுவான நிபந்தனைகள் பொருந்தும்.

17. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது வெள்ளை பின்னணியில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படத்தையும் பின்வரும் ஆவணங்களின் நகல்களையும் பதிவேற்ற வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) தேசிய ஆளடையாள அட்டை;
(இ) கல்வித் தகுதிகளைச் சான்றாகக் கொண்ட சான்றிதழ்கள்;
(ஈ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்;
(உ) விண்ணப்பதாரர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பணியிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று கூறும் நிறுவனத் தலைவரின் கடிதம். (ஏற்கனவே பணியமர்த்தப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்.) (விண்ணப்பப் படிவத்தின் படிவம் எண். 18 இல் இருக்க வேண்டும்)
(ஊ) நீங்கள் அரசுப் பணி அல்லது ஆயுதப்படைகளை விட்டு வெளியேறியிருந்தால் ராஜினாமா கடிதம்

18. ஏற்கனவே அரசுப் பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப்படிவத்தின் படிவம் எண். 18 இன் கீழ் உள்ள படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட கடிதத்தை, நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் அதிகாரபூர்வ முத்திரையுடன் பதிவேற்ற (Upload) வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ……………………………………………………………………………
இவர்…………………………… திணைக்களம் / நிறுவனத்தின் குழு/யுத்த இராணுவப் படையில் பணியாற்றும் நபர் என்றும், அவர் இந்த பதவிக்காக தேர்வு செய்யப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்று கூறுகிறேன்.

…………………………………………
நிறுவனத் தலைவர் கையொப்பம்
பெயர்…………………………
திகதி ………………………… அதிகாரபூர்வ முத்திரை

குறிப்பு : பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவு அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ்மா அதிபர்.

04-353/2

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

### கெடெட்டு உத்தியோகத்தர்களுக்கான பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு விண்ணப்பங்களை கோரல்

1. ரத்மலானை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திலும் மற்றும் அதன் சூரியவெவ தென் பல்கலைக்கழகத்திலும் கெடெட்டு உத்தியோக்கத்தர்களின் நிமித்தம் நடத்தப்படும் பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தகுதிவாய்ந்த பொருத்தமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சட்டத்தினாலும் அதனையடுத்து அந்த சட்டத்திற்கு வந்துள்ள திருத்தங்களினாலும், பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய கல்வி மற்றும் இராணுவ கற்கைகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் முப்படைகளின் நிரந்தரப் படையில் ஆணைபெற்ற உத்தியோகத்தர் பதவி நிலைகளுக்கு உள்ளீர்க்கப்பட்ட பின்னர் கெடெட்டு உத்தியோக்கத்தர்களுக்கு பட்டங்களை வழங்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

3. கல்விசார், இராணுவ மற்றும் பிற தேவைகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தவுடன், மேற்கூறிய கெடெட்டு உத்தியோக்கத்தர்கள், ஒப்பந்தங்கள்/பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு அந்தந்த சேவையில் அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கெடெட்டு உத்தியோக்கத்தர்கள், கல்வித் திட்டங்கள் தொடங்குவதற்கு முன்னர், அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்கு ஒரு கட்டாய இராணுவத் தீவிரப் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். மேலும், பட்டம் வழங்குவதற்கும் அந்தந்த இராணுவ சேவைகளில் ஆணையம் வழங்குவதற்கும், அந்தந்த இராணுவ கல்விக்கழகங்களில் (இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப்படை) ஒரு வருட மேம்பட்ட இராணுவப் பயிற்சியை நிறைவு செய்திருக்க வேண்டும்.

5. ரத்மலான KDU பல்கலைக்கழகத்திலும் அந்தந்த இராணுவக் கல்விக்கழகங்களிலும் நடத்தப்படும் கெடெட்டு உத்தியோக்கத்தர்களுக்கு ஏற்புடைய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

| | *பட்டப்படிப்பு* | *காலம் (ஆண்டுகள்)* |
|---|---|---|
| i. | இளமானி மூலோபாய கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞான பட்டப்படிப்பு | 03* |
| ii. | இளமானி மருத்துவ மற்றும் அறுவைசிகிச்சைப் பட்டப்படிப்பு (MBBS) | 05 |
| iii. | இளமானி விமானப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| iv. | இளமானி கட்டிட சேவைகள் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| v. | இளமானி சிவில் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| vi. | இளமானி மின் மற்றும் மின் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| vii. | இளமானி இலத்திரனியல் தொலைத்தொடர்புப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| viii. | இளமானி எந்திரப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| ix. | இளமானி மெகார்ட்ரொனிக் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| x. | இளமானி கடற்படைக் கட்டிடக்கலை கடல் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| xi. | இளமானி பொறியியல் கௌரவ கடல் பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| xii. | இளமானி சட்டப் பட்டப்படிப்பு (LLB) | 04* |
| xiii. | இளமானி முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 03* |

| | *பட்டப்படிப்பு* | *காலம் (ஆண்டுகள்)* |
|---|---|---|
| xiv. | இளமானி முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| xv. | இளமானி தளவாட மேலாண்மையில் விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 03* |
| xvi. | இளமானி சமூக விஞ்ஞானவியல் பட்டப்படிப்பு | 03* |
| xvii. | கேம்பிரிஜ் CELTA உடன் கூடிய ஏனைய மொழி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல் இளமானிக் கலைப் பட்டப்படிப்பு (TESOL) | 03 |
| xviii. | இளமானி விஞ்ஞான முகாமைத்துவ பட்டப்படிப்பு | 03 |
| xix. | இளமானி நிதியியல் பகுப்பாய்வு கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| xx. | இளமானி கணனி கௌரவ விஞ்ஞானப் பட்டப்டிப்பு | 04 |
| xxi. | இளமானி கணனிப் பொறியியல் கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| xxii. | இளமானி மென்பாகப் பொறியியல் கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு | 04 |
| xxiii. | இளமானி குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதிப் பட்டப்படிப்பு | 03* |

சூரியவெவ தென் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் கெடெட்டு உத்தியோக்கத்தர்களுக்கு ஏற்புடைய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

| | *பட்டப்படிப்பு* | *காலம் (ஆண்டுகள்)* |
|---|---|---|
| xxiv. | இளமானி தகவல் தொழில்நுட்ப கௌரவ விஞ்ஞான பட்டப்படிப்பு | 04 |

* குறிப்பிடப்பட்ட கால அளவில், அந்தந்த இராணுவக் கல்விக்கழகங்களிலும் (இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப்படை) ஒரு (01) வருட கல்வி மற்றும் இராணுவப் பயிற்சி அடங்கும்.

5.1 ஒவ்வொரு சேவையிலும் நிலவுகின்ற வெற்றிடங்கள், தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படும் மூன்று நேர்முகப் பரீட்சைகளிலும் பெற்ற மொத்தப் புள்ளிகள், ஒவ்வொரு சேவையினதும் ஆகக்குறைந்த உடலியல் தகைமைகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் அடிப்படையில் ஆயுதப்படைகளுக்குரிய கெடெட்டு உத்தியோக்கத்தர்களுக்காக குறித்தொதுக்கப்படும். கெடெட்டு உத்தியோக்கத்தர்கள் ஏற்புடைய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அவர்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் இலங்கை இராணுவம், இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப்படை ஆகியவற்றில் உள்ள நிரந்தரப் படைகளுக்கு அதிகாரபூர்வமாக நியமிக்கப்படுவார்கள்.

5.2 அந்தந்தப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கல்வி மற்றும் இராணுவப் பயிற்சி கூறுகளை பின்பற்றி வெற்றி கரமாக நிறைவுசெய்யும் கெடெட்டு உத்தியோக்கத்தர்களுக்கு பின்வரும் பட்டங்களிலொரு பட்டம் வழங்கப்படும்:

i. இளமானி மூலோபாய கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞான பட்டப்படிப்பு

ii. இளமானி மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் பட்டப்படிப்பு (MBBS)

iii. இளமானி விமானப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

iv. இளமானி கட்டிட சேவைகள் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

v. இளமானி சிவில் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

vi. இளமானி மின் மற்றும் மின் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

vii. இளமானி இலத்திரனியல் தொலைத்தொடர்புப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

viii. இளமானி எந்திரப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

ix. இளமானி மெகார்ட்ரொனிக் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

x. இளமானி கடற்படைக் கட்டிடக்கலை கடல் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xi. இளமானி பொறியியல் கௌரவ கடல் பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xii. இளமானி சட்டப் பட்டப்படிப்பு (LLB)

xiii. இளமானி முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xiv. இளமானி முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xv. இளமானி தளவாட முகாமைத்துவத்தில் விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xvi. இளமானி சமூக விஞ்ஞானவியல் பட்டப்படிப்பு

xvii. கேம்பிரிஜ் CELTA உடன் கூடிய ஏனைய மொழி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல் இளமானிக் கலைப் பட்டப்படிப்பு (TESOL)

xviii. இளமானி கௌரவ விஞ்ஞான முகாமைத்துவ பட்டப்படிப்பு

xix. இளமானி நிதியியல் பகுப்பாய்வியலில் கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xx. இளமானி கணனி கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xxi. இளமானி கணனிப் பொறியியல் கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xxii. இளமானி மென்பாகப் பொறியியல் கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு

xxiii. இளமானி தகவல் தொழில்நுட்ப கௌரவ விஞ்ஞான பட்டப்படிப்பு

xxvi. இளமானி குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதிப் பட்டப்படிப்பு

5.3 எல்லா பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் ஆங்கில மொழியில் மட்டும் நடாத்தப்படும்.

5.4 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களின் தகைமைகளுக்கு ஏற்ப கீழ்காணும் பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலொன்றைப் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**i. இளமானி மூலோபாய கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞானப் (BSc) பட்டப்படிபப்பு - மூன்று ஆண்டுகள் (ஆண்/பெண்)**

உயர் தரப் பரீட்சையில் **ஏதாவதொரு பிரிவில்** கல்வி கற்று **2024 (2025)** அல்லது **2025** ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளுடன் (S) பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ. ஜி. எஸ். சி. இ. / ஜி. சி. எஸ். இ. கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் அல்லது அதற்கிணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று "D" சித்திகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி உடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

**ii. இளமானி மருத்துவ மற்றும் அறுவைச்சிகிச்சை (MBBS) பட்டப்படிப்பு - ஐந்து ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல்** மற்றும் **பௌதீகவியல்)** கல்வி கற்று 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச்சித்தியும் (C) ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று (UGC அளவுகோல்கள்/ அதிவிசேட வர்த்தமானி எண் 2155/15, நாள் 26.12.2019) மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய

அல்லது

2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரை, ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிட்ஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது உள்நாட்டில் பயின்ற அதற்கு இணையான வெளிநாட்டுத் தேர்வின் தேர்வு முடிவுகள் பெறப்பட்டிருக்க வேண்டும். இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்வுகளில், இலங்கை மருத்துவ சபை (SLMC) மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஆகியவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச தரங்களுடன் ஒரே அமர்வில் பெறப்பட்டிருக்க வேண்டும் (UGC அளவுகோல்கள்/அதிவிசேட வர்த்தமானி எண் 2155/15, நாள் 26.12.2019).

iii. **இளமானி விமானப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் **பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல்** மற்றும் **இணைந்த கணிதம்)** கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிட்ஜ்/ எடெக்செல் (உ/த) பரீட்சையில் ஆகக்-குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

iv. **இளமானி கட்டிட சேவைகள் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண்)**

உயர் தரப் பரீட்சையில் **பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல்** மற்றும் **இணைந்த கணிதம்)** கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

v. **இளமானி சிவில் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் **பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல்** மற்றும் **இணைந்த கணிதம்)** கல்வி கற்று **2025 அல்லது 2025 (2024)** ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

vi. **இளமானி மின் மற்றும் மின் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண்/பெண்)**

உயர் தரப் பரீட்சையில் **பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல்** மற்றும் **இணைந்த கணிதம்)** கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

vii. **இளமானி இலத்திரனியல் தொலைத்தொடர்புப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

viii. **இளமானி எந்திரப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

குறிப்பு: இலங்கை கடற்படையின் செயல்பாட்டு மற்றும் பொறியியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான சிறப்பு அறிவு மற்றும் தொழில்நுட்ப அனுபவத்துடன் கடற்படை கெடெட்டுகள் பட்டம் பெறுவதை உறுதி செய்வதற்காக, இலங்கை கடற்படையில் சேர்க்கப்பட்டு, இளமானி எந்திரப் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பைத் தொடரும் அதிகாரி கேடட்கள், அனைத்து தானியங்கிப் பொறியியல் பாடப்பிரிவுகளையும் கட்டாயப் பாடப்பிரிவுகளாகத் தேர்ந்தெடுப்பதும் அவசியமாகும்.

ix. **இளமானி மெகார்ட்ரொனிக் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண்)**

உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

x. **இளமானி கடற்படைக் கட்டிடக்கலை கடல் பொறியியல் கௌரவ பொறியியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு “B” சித்திகளையும் ஒரு “C” சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xi. **இளமானி கடல் பொறியியல் விஞ்ஞான கௌரவ பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண்/பெண்)**

உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம்

திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு "B" சித்திகளையும் ஒரு "C" சித்தியையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

**xii. இளமானி சட்டப் பட்டப்படிப்பு (LLB) - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான/பௌதீக விஞ்ஞான/வணிக /கலைப்* பிரிவில் அல்லது பிரிவு அல்லாத துறையில் (நிபந்தனைகள் பொருந்தும்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச்சித்திகளையும் (C) மற்றும் ஒரு சாதாரண சித்தியையும் (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்த ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) பரீட்சையில் அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் பின்வரும் பட்டியலில் காணப்படும் பாடங்களில் ஆகக்குறைந்தது மூன்று "C" சித்திகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

| | |
|---|---|
| கணக்கியல் | உயிரியல் |
| விவசாய விஞ்ஞானம் | புவியியல் |
| உளவியல் | உயர் கணிதம் |
| வணிகப் புள்ளிவிபரங்கள் | சட்டம் |
| வணிகக் கற்கைகள் | தர்க்கவியல் விஞ்ஞான முறையியல் |
| வரலாறு | பொருளியல் |
| பௌதீகவியல் | இரசாயனவியல் |
| கணனி விஞ்ஞானம் | தொடர்பாடல் ஊடகக் கற்கைகள் |
| கணிதம்/இணைந்த கணிதம் | சமூகவியல் |
| அரசியல் விஞ்ஞானம் | தகவல் தொடர்படால் தொழில்நுட்பம் |

**விண்ணப்பதாரர்கள் உ/த பரீட்சையில் மேலேவுள்ள பட்டியலில் இருந்து மூன்று (03) பாடங்களை அல்லது ஒரு (01) பாடத்தை இல்லையெனில் இரண்டு (02) பாடங்களை/பின்வரும் பட்டியலில் இருந்து ஏனைய பாடத்தை/ பாடங்களை பின்பற்றியிருக்க வேண்டும்.**

| | |
|---|---|
| பௌத்த சமயம்/ பௌத்தநாகரிகம் | ஸ்பானிய மொழி |
| தமிழ் மொழி | கிறிஸ்தவம் / கிறிஸ்தவநாகரிகம் |
| இந்துசமயம் / இந்துநாகரிகம் | சமஸ்கிருத மொழி |
| கிரேக்க மற்றும் ரோமானிய நாகரிகம் | இஸ்லாம் / இஸ்லாமியநாகரிகம் |
| பிரெஞ்சு மொழி | ஜப்பான் மொழி |
| சீன மொழி | சிங்கள மொழி |
| ஆங்கில மொழி (பாட இலக்கம் 73 - க.பொ.த. உ/த) | |
| அரபு மொழி | பாளி மொழி |
| ஆங்கில மொழி இலக்கியம் | ஜேர்மனிய மொழி |
| பாரம்பரிய கற்கைகள் | ஹிந்தி மொழி |
| ரஷ்ஷிய மொழி | உலகளாவியகண்ணோட்டங்கள் ஆராய்ச்சி |

மேலும், விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்கள மொழியில் / தமிழ் மொழியில் ஆகக்குறைந்தது ஒரு திறமைச்சித்தியாவது (C) பெற்றிருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் வெளிநாட்டு உ/த கல்வித் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள், அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் நாளிலிருந்து இரண்டு (02) வருடங்களுக்குள் க.பொ.த. சா/த பரீட்சையில் ஆகக்குறைந்தது சிங்கள மொழியில்/தமிழ் மொழியில் திறமைச்சித்தியை (C) பெற்றுக்கொள்ளத் தேவைப்படுத்தப்படுவார்கள்.

xiii. **இளமானி முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான (BSc) விஞ்ஞானப் பட்டப்படிப்பு- மூன்று ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான மற்றும் பௌதீக விஞ்ஞான பிரிவில் கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று “D” சித்திகளை (பௌதீகவியலும் இரசாயனவியலும் உட்பட) பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xiv. **இளமானி முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான (BSc) கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு- நான்கு ஆண்டுகள் (ஆண்)**

உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான மற்றும் பௌதீக விஞ்ஞான பிரிவில் கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று “D” சித்திகளை (பௌதீகவியலும் இரசாயனவியலும் உட்பட) பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xv. **இளமானி தளவாட முகாமைத்துவத்தில் (BSc) விஞ்ஞானப் பட்டப்படிப்பு- மூன்று ஆண்டுகள் (ஆண்,பெண்)**

உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான/பௌதீக விஞ்ஞான அல்லது வணிக பிரிவில் கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று “D” சித்திகளை பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xvi. **இளமானி சமூக விஞ்ஞானவியல் (BSc) பட்டப்படிப்பு - மூன்று ஆண்டுகள் (ஆண், பெண்)**

உயர் தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் (எந்தப் பாட சேர்க்கையும்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று “D” சித்திகளை பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xvii. **ஏனைய மொழி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல் இளமானிக் கலைப் பட்டப்படிப்பு (TESOL)- மூன்று ஆண்டுகள் (ஆண்)**

உயர் தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று “D” சித்திகளை பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும். க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது மிகச்சிறந்த திறமைச்சித்தியை (B) அல்லது கேம்பிரிஜ்/எடெக்சல் அல்லது அதற்கு இணையான வெளிநாட்டு சா/த பரீட்சையில் ஆங்கில மொழியில் மிகச்சிறந்த திறமைச்சித்தியை (B) சித்தியை பெற்றிருக்க வேண்டும்.

xviii. **இளமானி கௌரவ விஞ்ஞான (BSc) முகாமைத்துவ பட்டப்படிப்பு- நான்கு ஆண்டுகள் (ஆண்/பெண்)**

உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான/பௌதீக விஞ்ஞான/தொழில்நுட்ப அல்லது வணிக பிரிவில் கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண

சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 22.06.2025 முதல் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xix. **இளமானி நிதியியல் பகுப்பாய்வியலில் (BSc) கௌரவ விஞ்ஞானப் பட்டப்படிப்பு- நான்கு ஆண்டுகள் (ஆண்)**
உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான/பௌதீக விஞ்ஞான அல்லது வணிக பிரிவில் கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

**க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதத்தில் ஆகக்குறைந்தது திறமை சித்தியை (C) அல்லது கேம்பிரிஜ்/எடெக்சல் அல்லது அதற்கு இணையான வெளிநாட்டு சா/த பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமை சித்தியை (C) பெற்றிருக்க வேண்டும்.**

xx. **இளமானி கணனி விஞ்ஞான (BSc) கௌரவ பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண்)**
உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் அல்லது பிரிவு அல்லாத துறையில்* (நிபந்தனைகள் பொருந்தும்) கல்வி கற்று இணைந்த கணிதத்தில் அல்லது உயர் கணிதத்தில் அல்லது பௌதீகவியலில் ஒரு திறமை சித்தியையும் (C) அத்துடன் 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழே பட்டியல் படுத்தப்பட்டுள்ள ஏனைய இரண்டு பாடங்களில் ஆகக்குறைந்தது ஒரு சாதாரண சித்தியையும் பெற்றுள்ளவர்கள் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

1. இணைந்த கணிதம்
2. உயர் கணிதம்
3. கணிதம்
4. பௌதீகவியல்
5. இரசாயனவியல்
6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

அல்லது

உரிய பிரிவில் 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்துள்ள ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றுள்ளவர்களும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்ப தற்குத் தகுதியுடையவர்களாவர்.

*ஒருங்கிணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் அல்லது பௌதீகவியல், அத்துடன் குறிப்பிடப்பட்ட வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள் கட்டாயமாகும்.

பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xxi. **இளமானி மென்பாகப் பொறியியல் கௌரவ விஞ்ஞானப் (BSc) பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண்/பெண்)**
உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் அல்லது பிரிவு அல்லாத துறையில்* (நிபந்தனைகள் பொருந்தும்) கல்வி கற்று இணைந்த கணிதத்தில் அல்லது உயர் கணிதத்தில் அல்லது பௌதீகவியலில் ஒரு திறமை சித்தியையும் (C) அத்துடன் 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழே பட்டியல் படுத்தப்பட்டுள்ள ஏனைய இரண்டு பாடங்களில் ஆகக்குறைந்தது ஒரு சாதாரண சித்தியையும் பெற்றுள்ளவர்கள் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்.

1. இணைந்த கணிதம்
2. உயர் கணிதம்

3. கணிதம்
4. பௌதீகவியல்
5. இரசாயனவியல்
6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

அல்லது

உரிய பிரிவில் 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்துள்ள ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று “D” சித்திகளை பெற்றுள்ளவர்களும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்.

*ஒருங்கிணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் அல்லது பௌதீகவியல், அத்துடன் குறிப்பிடப்பட்ட வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள் கட்டாயமாகும்.

பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xxii. **இளமானி கனனிப் பொறியியல் விஞ்ஞான (BSc) கௌரவ பட்டப்படிப்பு - நான்கு ஆண்டுகள் (ஆண்/பெண்)**
உயர் தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் பிரிவு அல்லாத துறையில்* (நிபந்தனைகள் பொருந்தும்) கல்வி கற்று இணைந்த கணிதத்தில் அல்லது உயர் கணிதத்தில் அல்லது பௌதீகவியலில் ஒரு திறமை சித்தியையும் (C) அத்துடன் 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழே பட்டியல் படுத்தப்பட்டுள்ள ஏனைய இரண்டு பாடங்களில் ஆகக்குறைந்தது ஒரு சாதாரண சித்தியையும் பெற்றுள்ளவர்கள் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்.

1. இணைந்த கணிதம்
2. உயர் கணிதம்
3. கணிதம்
4. பௌதீகவியல்
5. இரசாயனவியல்
6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

அல்லது

உரிய பிரிவில் 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிறைவுசெய்துள்ள ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று “D” சித்திகளை பெற்றுள்ளவர்களும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்ப தற்குத் தகுதியுடையவர்களாவர்.

*ஒருங்கிணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் அல்லது பௌதீகவியல், அத்துடன் குறிப்பிடப்பட்ட வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள் கட்டாயமாகும்.

பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xxiii. **இளமானி தகவல் தொழில்நுட்ப முறைமைகள் (BSc) கௌரவ விஞ்ஞானப் பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண்)**
உயிரியல் விஞ்ஞான/பௌதீக விஞ்ஞான/வணிக/கலை*/தொழில்நுட்ப*** பிரிவில் அல்லது பிரிவு அல்லாத துறையில்* கல்வி கற்று, 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

அல்லது

*ஒருங்கிணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் அல்லது பௌதீகவியல், அத்துடன் குறிப்பிடப்பட்ட வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள் கட்டாயமாகும்.

***தொழில்நுட்ப பிரிவில் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) மற்றும் ஏனைய ஏதாவது இரண்டு பாடங்களில்)

அல்லது

2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நிறைவுசெய்துள்ள கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) பரீட்சையில் அல்லது அதற்கிணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது "D" சித்திகளை பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

xxiv. இளமானி குற்றவியல் மற்றும் குற்றவியல் (BSc) நீதிப் பட்டப்படிப்பு - மூன்று ஆண்டுகள் (ஆண்/பெண்)
உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான/பௌதீக விஞ்ஞான/வணிக/கலைப்* பிரிவில் அல்லது பிரிவு அல்லாத துறையில் (நிபந்தனைகள் பொருந்தும்) கல்வி கற்று 2024 (2025) அல்லது 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் பின்வரும் பட்டியலிலுள்ள (பட்டியல் A மற்றும் B) மூன்று பாடங்களில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுள்ளவர்கள் அல்லது 2025.06.22 ஆம் திகதி முதல் 2026.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.ஜி.சி.எஸ்.இ / ஜி.சி.எஸ்.இ கேம்பிரிஜ்/ எடெக்சல் (உ/த) அல்லது அதற்கு இணையான ஒரு வெளிநாட்டுப் பரீட்சையில் பின்வரும் மூன்று பாடங்களில் ஆகக்குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றுள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். பெறுபேறுகள் ஒரே அமர்வில் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது மூன்று தடவைகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

**பட்டியல் 'A'**

| | |
|---|---|
| கணக்கியல் | இரசாயனவியல் |
| புவியியல் | கணிதம்/இணைந்த கணிதம் |
| வணிகப் புள்ளிவிபரங்கள் | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| தர்க்கவியல் விஞ்ஞான முறையியல் | விவசாய விஞ்ஞானம் |
| பௌதீகவியல் | உயர் கணிதம் |
| தொடர்பாடல் ஊடகக் கற்கைகள் | வணிகக் கற்கைகள் |
| அரசியல் விஞ்ஞானம் | பொருளியல் |
| உயிரியல் | வரலாறு |
| உளவியல் | சட்டம் |
| சமூகவியல் | கணினி விஞ்ஞானம் |

மேலேவுள்ள பட்டியலிலிருந்து (பட்டியல் 'A') உ/த பரீட்சையில் எல்லா மூன்று பாடங்களும் அல்லது ஒரு பாடம் அல்லது இரண்டு பாடங்கள் இல்லையெனில் பின்வரும் பட்டியலிலிருந்து (பட்டியல் 'B')

**பட்டியல் 'B'**

| | |
|---|---|
| பௌத்த சமயம்/பௌத்தநாகரிகம் | இஸ்லாம் / இஸ்லாமியநாகரிகம் |
| பாளி மொழி | சீன மொழி |
| ஹிந்தி மொழி | ஜேர்மனிய மொழி |
| கிறிஸ்தவம் / கிறிஸ்தவநாகரிகம் | தமிழ் மொழி |
| கிரேக்க மற்றும் ரோமானிய நாகரிகம் | பிரெஞ்சு மொழி |
| ஜப்பான் மொழி | சிங்கள மொழி |
| ஆங்கில மொழி (க.பொ.த. . உ/த பாட இலக்கம் 73) | அரபு மொழி |
| சமஸ்கிருத மொழி | உலகளாவிய கண்ணோட்டங்கள் ஆராய்ச்சி |
| இந்துசமயம் / இந்துநாகரிகம் | விவசாயம்- தொழில்நுட்பம் |
| பாரம்பரிய கற்கைகள் | சித்திரம் |
| ஆங்கில இலக்கியம் | நாடகம் மற்றும் திரையரங்கு |
| ஸ்பானிய மொழி | ரஷ்ஷிய மொழி |
| நடனம் | கொரிய மொழி |
| இசை (மேற்கத்தேய / கீழத்தேய) | |

மேலும் விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் திறமைச்சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 தேர்ந்தெடுக்கப்பட்ட கெடெட்டு உத்தியோகத்தர்கள் பட்டப்படிப்புத் திட்டத்துடன் தொடர்புடைய பொதுப் பாடங்களைப் பின்பற்ற வேண்டும், மேலும் ஆங்கிலம் மற்றும் இராணுவப் பாடங்களைப் பின்பற்றுவது கட்டாயமாகும்.

5.6 மேலும், தேர்ந்தெடுக்கப்படும் எல்லா கெடெட்டு உத்தியோகத்தர்களும் அவர்களின் பயிற்சி காலப்பகுதியில் தொடர்ச்சியாக அப்பியாசம், உடற்பயிற்சி செயற்பாடுகள், ஆயுதப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி பாடநெறி என்பவற்றைப் பின்பற்ற வேண்டும்.

6. a) **கெடெட்டு உத்தியோகத்தர்களுக்கான அடிப்படைத் தகைமைத் தேவைப்பாடுகள்:**

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

i. இலங்கைப் பிரஜையாகவும்
ii. 31.12.2025 அன்று 18 வயதுக்குக் குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.
iii. க.பொ.த. உ/த பரீட்சையில் பொதுப் பாடப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் (03 அமர்வுகளுக்குள்) (ஆகக்குறைந்தது 30 புள்ளிகள்)
iv. இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க (அவன்/அவள் க.பொ.த. உ/த பரீட்சாத்தியாக இருந்தால்) தகுதியுடையவராகவும்
v. விவாகமாகாதவராகவும் (பயிற்சி காலத்தில் சேவைப் பிரமாணக் குறிப்பினால் திருமணம் செய்ய அனுமதியளிக்கப்படாத வரையில் கெடெட்டு உத்தியோகத்தர் எவரும் திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்) இருத்தல் வேண்டும்.

b) **ஏனைய தகைமைத் தேவைப்பாடுகள்:**

i. 2024 (2025) அல்லது (2025) ஆம் ஆண்டு க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றி (MBBS பட்டப்படிப்புக்கு தவிர) பெறுபேறுகளை பெற்றிருத்தல். MBBS பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு கருத்திற்கொள்ளப்படும் க.பொ.த. (உ/த) ஆண்டு 2025 ஆம் ஆண்டாகும்.

ii. 22.06.2025 முதல் 31.05.2026 வரை ஒன்று மற்றும் அதே அமர்வில் கேம்பிரிட்ஜ்/எடெக்செல் (உ/த) அல்லது அதற்கு இணையான வெளிநாட்டுத் தேர்வை எழுதி, அதன் தேர்வு முடிவுகளைப் பெற்று, பல்கலைக்கழக சேர்க்கைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பட்டப்படிப்புகளுக்கும் பரிசீலிக்கப்படுவார்கள்.

iii. TESOL பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் தவிர ஏனைய எல்லா பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஆங்கிலப் பாடத்தில் திறமைச்சித்தியை (C) அல்லது கேம்பிரிஜ்/எடெக்சல் அல்லது அதற்கு இணையான பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் “C” சித்தியை பெற்றிருத்தல். ஏனைய மொழி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல் (TESOL) BA பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் அல்லது கேம்பிரிஜ்/எடெக்சல் அல்லது அதற்கு இணையான சா/த பரீட்சையில் ஆகக்குறைந்தது ஆங்கிலப் பாடத்தில் மிகச்சிறந்த திறமைச்சித்தியை (B) பெற்றிருத்தல் வேண்டும்.

iv. **இலங்கை இராணுவம்/கடற்படை மற்றும் விமானப்படைக்கான க.பொ.த. (சா/த) அல்லது அதற்கு இணையான வெளிநாட்டுத் தேர்வுகளின் தகுதித் தேவை**

க.பொ.த. (சா/த) அல்லது அதற்கு இணையான வெளிநாட்டுத் தேர்வில், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களில் கட்டாய திறமை சித்திகளுடன் (C), குறைந்தபட்சம் ஆறு (06) திறமை சித்திகளை (C) தேர்ச்சிகளுடன் எட்டு (08) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்தத் தேர்ச்சிகள் ஒரே அமர்வில் இரண்டு முயற்சிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும் (கூடுதல் மற்றும் விருப்பப் பாடங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது).

v. கேம்பிரிஜ்/எடெக்சல் அல்லது அதற்கிணையான வேறு ஏதாவது வெளிநாட்டு தகைமைகளையுடைய பரீட்சாத்திகள் உள்நாட்டு க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்கள மொழியில்/தமிழ் மொழியில் ஒரு திறமை “C” சித்தியை (தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும்) பெற்றிருக்க வேண்டும். பரீட்சாத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது உள்நாட்டு க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றியில்லை எனில், அவன்/அவள் ஒரு கெடெட்டு உத்தியோகத்தராக சேர்க்கப்பட்டதன் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குள் சிங்கள மொழியில்/தமிழ் மொழியில் ஒரு திறமை “C” சித்தியை பெற்றுக்கொள்ள வேண்டும். பரீட்சாத்தி குறித்த காலப்பகுதிற்குள் மேற்குறித்த தேவைப்பாடுகளை பூர்த்திசெய்ய தவறினால், அவன்/அவள் உரிய சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

c) கீழ்காணும் ஆகக்குறைந்த உடலியல் நியம தகைமைகள் திருப்தியாகவிருக்க வேண்டும்:

| | *இராணுவம்* | | *கடற்படை* | | *விமானப்படை* | |
|---|---|---|---|---|---|---|
| | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* |
| உயரம் | 5' 6" (167.5 செ.மீ.) | 5' 3" (162 செ.மீ.) | 168 செ.மீ. (புரோ வோஸ்ட் பிரிவுக்கு 170.5 செ.மீ.) | 160 செ.மீ. (புரோ வோஸ்ட் பிரிவுக்கு 163 செ.மீ.) | 5' 5" மற்றும் அதற்கு மேல் (165 செ.மீ.) | 5' 3" மற்றும் அதற்கு மேல் (160 செ.மீ.) |
| எடை | 52 கிகி (118 பவுண்ஸ்) | 45 கிகி | 52 கிகி | 41கிகி | - | - |
| BMI | 18.5- 25kg/m$^2$ | | 17 - 27 | | <26 மற்றும் >17 | <25 மற்றும் >17 |
| மார்பு | 32" | - | 81.28 செ.மீ. | - | 32" (ஆகக் குறைந்தது 81 செ.மீ.) | - |

| *கண்பார்வை* | *இராணுவப் படை* | | | *கடற்படை* | | | *விமானப்படை* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *முக்கிய கண்* | *மற்ற கண்* | *CP* | *முக்கிய கண்* | *மற்ற கண்* | *CV* | *முக்கிய கண்* | *மற்ற கண்* | *CP* |
| கண் வில்லைகள் பாவிக்காமல் | 6/6 | 6/9 | CP 2 | 6/6 | 6/6 | CP 2 | 6/6 | 6/6 | CP 2 |
| கிட்டப் பார்வை | - | - | - | ஜேகர் அட்டவணை 01 மூலம் (By Jaegar chart 01) | | | - | - | - |

**விஷேட குறிப்பு**:

*ஒரு விண்ணப்பதாரர் 17 வயதுக்குட்பட்ட/ 19 வயதுக்குட்பட்ட மட்டத்தில் தேசிய நிலைகளை அல்லது விளையாட்டில் தேசிய நிலைகளை பெற்றிருந்தால் அல்லது விண்ணப்பதாரர் சனாதிபதியின்/பிரதமரின் பாதுகாவலராக/ சனாதிபதியின்/பிரதமரின் வழிகாட்டியாக/கீழ்நிலை கெடெட்டு உத்தியோகத்தராக (சிரேஷ்ட/ கனிஷ்ட)/கெடெட்டு சார்ஜனாக இருந்தால், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்படும் இறுதி நேர்முகப் பரீட்சைத் தேர்வுக் குழுவினால் மேற்கண்ட உடல் தகுதிகள் குறைக்கப்படலாம்.

ஒரு விண்ணப்பதாரர் விளையாட்டுக்களில் 17 வயதுக்குட்பட்ட/ 19 வயதுக்குட்பட்ட என்ற தேசிய நிலைகளை பெற்றுள்ளாரெனில் அவர் பின்வரும் நிலைகளைப் பெற்றிருக்க வேண்டும்:

தனிநபர் நிகழ்ச்சியில் - 1ஆம்/2ஆம்/3ஆம் நிலைகள்
குழு நிகழ்ச்சியில் -சம்பியன்/ 1ஆம் சிறப்புநிலை

* ஒரு விண்ணப்பதாரர் அந்தந்த சேவைகளினால் குறிப்பீடுசெய்யப்படும் கண்பார்வை நியமளவுகளை பூர்த்தி செய்வதற்கு தேவைப்படுத்தப்படுவார்.

(d) விண்ணப்பதாரர்கள் தேவையான மருத்துவ நியமங்களை அனுசரித்திருக்க வேண்டும் - ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையின் தலைவராக உள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திருப்திப்படும் வகையில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்தில் காணப்படும் ஒரு மருத்துவ வெளிப்படுத்துகைப் படிவத்தை சமர்ப்பித்த பின்னர், வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனையில் தகுதிபெற தேவைப்படுத்தப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் மருத்துவ வெளிப்படுத்துகைப்படிவத்தில் ஒரு விண்ணப்ப தாரர் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என கண்டறியப்பட்டால் அத்தகைய விண்ணப் பதாரர் தகுதியற்றவராவார். பொய்யான தகவல்களை வழங்கியதன் அடிப்படையில் அத்தகைய விண்ணப்பதாரர் வெளியேற்றப்படு வதற்கும் ஆளாகுவார். மருத்துவ வெளிப்படுத் துகைப் படிவத்தை பல்கலைக்கழக இணையத் தளத்தில் (www.kdu.ac.lk) கீழிறக்கம் செய்து கொள்ளலாம்.

7. **சேவை நிபந்தனைகள்:** தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் ரத்மலான ஜெனரல் சேர் ஜோன் கொத்தலா வலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் அல்லது சூரியவெவ தென் பல்கலைக்கழகத்தில் கெடெட்டு உத்தி யோக்கத்தர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இந்த விண்ணப்பதாரர்கள் 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சட்டத்தினாலும், அதனையடுத்து அந்த சட்டத்திற்கு வந்துள்ள திருத்தங்களினாலும் ஆக்கப்பட்டுள்ள அல்லது அந்தந்த சேவைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அத்தகைய சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய இயைந்தொழுக வேண்டும்.

MBBS பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்று வதற்காக சேர்த்துக்கொள்ளப்படும் கெடெட்டு பயிலுநர் உத்தியோக்கத்தர் ஒருவர் அந்தந்த சேவையில் ஒரு உத்தியோகத்தராக அதிகாரபூர்வமாக நியமிக்கப்படும் திகதியிலிருந்து இருபது (20) ஆண்டுகளுக்கு குறை யாமல் தொடர்ச்சியாக இடையறாத ஒரு காலப்பகுதிற்கு இராணுவ சேவையில் பணியாற்ற வேண்டும்.

ஏனைய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்று வதற்காக சேர்த்துக்கொள்ளப்படும் கெடெட்டு உத்தி யோக்கத்தர் ஒருவர் அந்தந்த சேவையில் ஒரு உத்தி யோகத்தராக அதிகாரபூர்வமாக நியமிக்கப்படும் திகதியிலிருந்து பன்னிரெண்டு (12) ஆண்டுகளுக்கு குறையாமல் தொடர்ச்சியாக இடையறாத ஒரு காலப் பகுதிற்கு இராணுவ சேவையில் பணியாற்ற வேண்டும்.

மேலும், அடிப்படை, கல்வி அல்லது மேம்பட்ட இராணுவப் பயிற்சிக் காலத்தில் மருத்துவக் காரணங் களுக்காகவோ, ஒழுங்கு நடவடிக்கைக் காரணங் களுக்காகவோ அல்லது வேறு ஏதேனும் நிபந்தனை களின் பேரிலோ பணிநீக்கம் செய்யப்படும் எந்தவொரு கெடெட்டு உத்தியோகத்தருக்கும் பட்டம் வழங்கப் படாது.

8. சேர்த்துக்கொள்ளப்படும்நேரத்தில்,தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அந்தந்தப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பட்டமளிக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு கட்டாயக் காலப்பகுதிற்கு பணியாற்ற இலங்கைச் சனநாயக சோசலிஷக் குடியரசுடன் ஒரு பிணைமுறியை வழங்கி ஒரு ஒப்பந்தத்தை செய்துகொள்ள வேண்டும்.

9. கெடெட்டு உத்தியோக்கத்தர்களுக்கு மாதமொன்றுக்கு சம்பளமாகவும் கொடுப்பனவுகளாகவும் சுமாராக 105,000.00 (பங்கீட்டுக் கொடுப்பனவு மற்றும் இதர பொருந்தக்கூடிய கொடுப்பனவுகள் அடங்கலாக) செலுத்தப்படும். இது தவிர, பின்வரும் வசதிகள் இலவசமாக வழங்கப்படும்:

(i) தங்குமிடவசதி
(ii) சீரூடைகள்
(iii) பெட்மென்-வசதிகள்
(iv) விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
(v) மருத்துவ வசதிகள்

10. இலங்கை இராணுவ, கடற்படை, விமானப்டை ஆகிய வற்றின் நிரந்தரப்படைகளுக்கு அதிகாரபூர்வமாக உள்வாங்கப்படுவதன் பேரில் சேவைக்கு ஏற்ப பதவி நிலைக்கு பொருத்தமான கொடுப்பனவுகளையும் பெற உரித்துடையவர்களாகவிருப்பார்கள்.

a. பின்வருவன மாதாந்தம் செலுத்தக்கூடிய கொடுப் பனவுகளாகும்:
(i) தகைமைக் கொடுப்பனவு
(ii) பங்கீட்டுக் கொடுப்பனவு
(iii) உள்ளே தங்கியிருக்க வேண்டுமென பணிக்கப் படும் போது இடையூறுக் கொடுப்பனவு (திருமணமாகிய உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)
(iv) சீருடை பராமரிப்பு கொடுப்பனவு

b. ஏனைய வசதிகளும் கொடுப்பனவுகளும்:
(i) உள்ளே தங்கியிருக்க வேண்டுமென பணிக்கப் படுகின்ற போது தங்குமிடவசதி
(ii) திருமணமாகிய உத்தியோகத்தர்களுக்கு மட்டுப் பட்டளவான வாடகைக் கொடுப்பனவு
(iii) சீருடைக்கான கொடுப்பனவு
(iv) திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பெட் மென் கொடுப்பனவு மற்றும் திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பெட்மென் சேவைகள்

11. இராணுவ/கடற்படை/விமானப்படை உத்தியோகத்தர்கள், அவர்களின் சம்பள நன்மைகளும் சேவை நிபந்தனைகளும் தொடர்பான பின்வரும் ஒழுங்கு விதிகளினால் ஆளப்படுவார்கள்.

   i. இராணுவ/கடற்படை/விமானப்படை சம்பள விதிக் கோவை

   ii. இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இராணுவ/கடற்படை/விமானப் படை உத்தியோகத்தர்களின் நிமித்தம் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்

   iii. இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இராணுவ/கடற்படை/விமானப்படை ஊழியர்களின் நிமித்தம் நடைமுறையிலுள்ள ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை விதிக்கோவைகள்

12. கெடெட்டு உத்தியோக்கத்தர்கள் பயிற்சி பெறும் காலப்பகுதியில் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்/ அல்லது அந்தந்த சேவைக் கட்டளை அதிகாரிகள் குறிப்பீடுசெய்யலாமெனும் அத்தகைய பயிற்சியைப் பெறத் தேவைப்படுத்தப்படுவார்கள்.

13. பயிற்சி பெறுகின்ற கெடெட்டு உத்தியோக்கத்தர்கள் பயிற்சிக்காக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியால் எப்பாகத்திலேனும் அமர்த்தப்படுவதற்கு உட்படுவார்கள்.

14. பயிற்சி பெறுகின்ற கெடெட்டு உத்தியோக்கத்தர்கள் வழங்கப்படும் தங்குமிடவசதிகளில் தங்குவதற்கும் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அல்லது அந்தந்த சேவை ஸ்தாபனங்கள் விதிக்கும் விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கும் தேவைப்படுத்தப்படுவார்கள்.

15. **மொழித் தேவைப்பாடுகள்**: இலங்கைச் சனநாயக சோசலிஷக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு பயன் கொடுக்கும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் ஆக்கப்படலாமெனும் ஏதாவது விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை அனுசரித்து நடக்க தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தேவைப்படுத்தப்படுவார்கள்.

16. **ஆளடையாளத்தை நிரூபித்தல்:** விண்ணப்பதாரர்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க அவர்களின் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்குமாறு தேவைப் படுத்தப்படுவார்கள். ஆட்கள் பதிவுத் திணைக்களம் அல்லது தபால் மாஅதிபர் வழங்கிய அடையாள அட்டைகள், செல்லுபடியான கடவுச்சீட்டுக்கள் அல்லது மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் வழங்கிய சாரதி அனுமதி அட்டைகள் இந்த நோக்கத்தின் நிமித்தம் ஏற்றுக்கொள்ளப்படும்.

17. **விண்ணப்பங்கள்** : ஒன்லைனில் விண்ணப்பிக்கும் பொருட்டு www.kdu.ac.lk என்ற பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் பிரவேசிக்கவும்.

   (i) பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு www.kdu.ac.lk. என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து நீங்கள் ஒன்லைனில் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்லைன் விண்ணப்ப செயன்முறை உங்களின் சௌகரிகத்திற்காக KDU இன் இணையத்தளத்தில் செய்துகாண்பிக்கப்பட்டுள்ளது. ஒன்லைனில் விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துவதற்கு பல்கலைக் கழகத்தின் இணையத்தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள். தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படாது.

   (ii) ஒவ்வொரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் ஒன்லைனில் விண்ணப்பம் படிமுறைப்படுத்தப் படுவதற்காக விண்ணப்பதாரர்கள் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா (இலங்கை ரூபா) கட்டணத்தை செலுத்த வேண்டும்.

18. அடிப்படைத் தகைமைகள் இல்லாத விண்ணப்பங்களும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க உரியவாறு பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில், விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப் படாது. கிடைக்கும் சகல விண்ணப்பங்களும் உப வேந்தரால் நியமிக்கப்படும் ஒரு சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகளுக்கு ஏற்ப தரப் படுத்தப்பட்டுப் பட்டியல்படுத்தப்படும். அவ்வாறு பட்டியல்படுத்தப்படும் விண்ணப்பதாரர்கள் பூர்வாங்க மற்றும் அதனைத் தொடர்ந்த நேர்காணல்களுக்காக அழைக்கப்படுவார்கள்.

உரியவாறு ஒன்லைனில் பூரணப்படுத்திய விண்ணப் பங்கள் 22.06.2025 முதல் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி அல்லது அதற்கு முன்னர் KDU இன்

இணையத்தளத்தினூடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கின்ற விண்ணப்பங்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரிக் காத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களும் நிரா கரிக்கப்படும்.

19. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்டசபைகளில் பணியாற்றும் விண் ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை ஒன்லைனி னூடாக அனுப்பிவைக்க வேண்டும். எனினும், குறித்த விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் விடுவிக்கப்படலாம் என்பதற்கு அந்தந்தத் திணைக் களங்களின் / கூட்டுத்தாபனங்களின் / நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் அல்லது அந்தந்த நிறுவனத் தலைவர்கள் வழங்கும் சான்றிதழ் பூர்வாங்க நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

20. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்படும் தெரிவுக் குழு நிர்ணயிக்கும் மதிப்பீட்டுத் தகவுதிறன்களுக்கு இணங்க தேவைப்படுத்தப்படும் தரநிலைகளை அடைந்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மத்தியிலிருந்து பூர்வாங்கத் தெரிவு நிகழும். முதலாவது நேர்முகப் பரீட்சையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலா வலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத் துவ சபையால் குறிப்பீடுசெய்யப்படலாம் என்றவாறு கெடெட்டு உத்தியோகத்தர் தரப் பரீட்சைக்கு (OQT) தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்படும் இறுதித் தெரிவுக் குழுவினால் இவர்கள் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

21. நேர்முகப் பரீட்சைகளுக்கும் மற்றும் கெடெட்டு உத்தி யோகத்தர் தரப் பரீட்சைக்கும் (OQT) தெரிவு செய்யப் படும் விண்ணப்பதாரர்களுக்கு அத்தகைய பரீட்சை களும் நேர்முகப் பரீட்சைகளும் நடைபெறும் இடங்கள், நேரங்கள், திகதிகள் மற்றும் இதர அறிவுறுத்தல்கள் குறித்து KDU இன் இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும். இந்த நோக்கங்களின் நிமித்தம் பிரயாண செலவும் அல்லது பிற செலவுகள் ஏதும் விண்ணப்பதாரர்களுக்கு செலுத்தப்படாது.

22. கெடெட்டு உத்தியோகத்தர் தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற/இராணுவ பயிற்சி பெறுகின்ற வேளையில் விண்ணப்பதாரர்கள் உடற்காயமடைந்தால் அத்தகைய உடற்காயத்திற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பொறுப்புக்கூற மாட்டாது. கெடெட்டு உத்தியோகத்தர் தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற/இராணுவ பயிற்சி பெறுகின்ற வேளையில் ஏற்படும் ஏதாவது உடற்காயங்களுக்கு எந்த விண்ணப்பதாரர்களும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திடமிருந்து அல்லது இலங்கை அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு கோரலையும் விடுக்க முடியாது.

23. ஒரு விண்ணப்பதாரரை சிபாரிசு செய்ய விரும்பும் எவரேனும் ஆளொருவர் அவரை ஒரு நற்சான்றிதழின் மூலம் சிபாரிசுசெய்ய வேண்டும். ஏதாவதொரு வழியில் செல்வாக்குச் செலுத்துவது தகைமையீனமாக கருதப்படும்.

24. விண்ணப்பங்கள் பெறப்பட்டதற்கான ஒப்புதல் மின்னஞ்சல் முறையில் அனுப்பப்படும். தகுதிகளின் அடிப்படையிலான போட்டித் தேர்வு காரணமாக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக எந்த விதமான கடிதத்தொடர்போ அல்லது விசாரணைகளோ ஏற்றுக்கொள்ளப்படாது.

25. வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையில் ஏதாவது ஒரு முரண்பாடு காணப்பட்டால் சிங்கள மொழியில் உள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அறிவுரைகளை நீங்கள் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றீர்கள்.

ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொண்டா
(ஓய்வுபெற்ற)
WWV, RWP மற்றும் இரண்டு பார்கள், RSP
மற்றும் பார், USP, MMSc (Strat Stu-China),
MSc (Def Stu) in Mgt, MSc (Def & Strat
Stu), fndu (China), psc
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
முகாமைத்துவ சபையின் தலைவர்
ஜெனெரல் சேர் ஜோன் கொத்தலாவலைப்
பல்கலைக்கழகம்.

04-409

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத / தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

01. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் சாராத / தொழில்நுட்பம்சார் சேவை வகுதிக்குரிய இலங்கை தொழில்நுட்ப சேவையின் பன்னிரெண்டு (12) தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இந்தப் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக 2026.04.30 ஆம் திகதி பிரசித்தப்படுத்தப்பட்ட அறிவித்தலுக்கமைய ஆட்சேர்த்துக்கொள்வதற்கான சதவீதத்திற்கு போது மானளவு உள்ளக விண்ணப்பதாரிகள் இல்லாதிருப்பின் அந்தப் பதவிகள் எண்ணிக்கையையும் இந்த அறிவித்தலுக்கமைய நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் வெளிவாரியான விண்ணப்பதாரிகளினால் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.)

02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.05.25 ஆகுமென்பதோடு, அன்றைய திகதி யன்று விண்ணப்பதாரிகளின் வயது 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN-03 -2025 இற்குரித்தான ரூபா 52,250.00 - 10x800 - 11x1,190 – 10x1,320 – 10x1,350 – ரூபா 100,040.00 சம்பள அளவுத்திட்டம் ஏற்புடையதாகும்.

04. **ஆட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள் (III ஆம் தரம் - திறந்த) :**

4.1 **கல்வித் தகைமைகள்:**

க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் கணிதப் பிரிவில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பவியல் பாடத்துறையில் பொறியியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம் உள்ளிட்ட மூன்று பாடங்களுடன் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல்

மற்றும்

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

4.2 **தொழில் தகைமைகள் :**

I. மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்). அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ் (சிவில்). அல்லது

III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்). அல்லது

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பம் டிப்ளோமா (சிவில்). அல்லது

V. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் (சிவில்) பரீட்சையில் 1 ஆம் பகுதியை சிறப்பாக நிறைவு செய்திருத்தல். அல்லது

VI. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் பயிற்சி தகைமை (NVQ – 06) மட்டத்தை (சிவில்) நிறைவு செய்திருத்தல். அல்லது

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் களை வழங்கும் நிறுனங்களிடம் கருத்துக் களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பத் தகைமை களுக்கு சகல வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் (சிவில் பிரிவில் ) பெற்றிருத்தல்.

4.3 **ஏனைய தகைமைகள்:**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. ஏதேனுமொரு மதத்தின் துறவற நிலையை வகிக்கின்ற எவரும் இந்தப் பரீட்சைக்கு தோற்று வதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள்.
iv. தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்று வதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

**கவனத்திற்கு** - விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அந்தத் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

05. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

i. இப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும். தாங்கள் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் விதத்திற்கமைய அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.
ii. தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கான கடமைப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. தற்போது வலுப்பெறுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறையின் நிபந்தனைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் திருத்தங்களுக்கும் தாங்கள் உட்படுதல் வேண்டும்.

06. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை :**

விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளிடையே நியமன அதிகாரி தீர்மானிக்கும் எண்ணிக்கையை சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தகைமைகளை பரீட்சித்ததன் பின்னர் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும். சாதாரண நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லையென்பதோடு, அடிப்படைத் தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

6.1 **எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத் திட்டம் :**

பரீட்சை பிரதானமாக 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

| *வினாத்தாள்* | | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. | நுண்ணறிவு சோதனை | 01 மணித்தியாலம் | 100 | 50% |
| 2. | விடயம் சார்ந்த தொழில்நுட்ப சோதனை | 01 மணித்தியாலம் | 100 | 50% |

6.2 **பாடத்திட்டம்:**

i. நுண்ணறிவு சோதனை:

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியிலான சிந்திக்கும் திறன், பகுப்பாய்வு சிந்தனை, தீர்மானமெடுக்கும் திறன் ஆகியவற்றை சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

ii. விடயம் சார்ந்த தொழில்நுட்ப சோதனை :

அடிப்படைக் கணித அறிவு மற்றும் அடிப்படை சிவில் பொறியியல் சார்ந்த அறிவை சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

07. மொழித் தேர்ச்சி :
இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கமைவானதாகும்.

08. தரங்களுக்கான பதவியுயர்வு :
இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கமைவானதாகும்.

09. வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் :
இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கமைவானதாகும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்:**

10.1 விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணபப்படிவத் திற்கமைய A4 அளவிலான தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பதாரி தனது கையெழுத்தினால் தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப் படும். விண்ணப்பமொன்று காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்.

10.2 விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற மொழியிலேயே விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

10.3 சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.05.25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலக்கம்: 1114, பன்னிபிட்டிய வீதி, தலத்துகொட எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

10.4 விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதாக அறவிக்கப் படமாட்டாது. பூரணமற்ற மற்றும் தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படுமென்பதோடு, தபாலில் காணாமற் போதல் மற்றும் தாமதங்கள் தொடர்பாக முன் வைக்கப்படும் எந்தவிதமான முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10.5 பரீட்சைக் கட்டணம் ரூ. 2000.00 ஆகும். பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலங்கை வங்கி, தலவத்துகொட கிளை, கணக்கு இலக்கம் 7040440 வரவு வைக்கப்படும் வகையில் நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமாக இருக்கும். எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

10.6 தற்போது அரச / மாகாண அரச சேவையில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றுகின்ற நிறுவனத்தின் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

11. **பரீட்சை நடைமுறை :**

11.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணபித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்பங்களை கையேற்ப தற்கான இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித் துள்ள விண்ணப்பதாரிகளுக்கு தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத் தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் தபாலில் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது பற்றி தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டு www.dncws.lk வலைதளத்தில் வலைதள அறிவித்தலொன்றின் ஊடாக அறிவிக்கப்படும். தனக்குரிய அனுமதிப்பத்தரம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரியொருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது தொடர்பாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவிடம் விசாரித்தறிதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தம்மிடம் வைத்திருக்கும் விண்ணபத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் போட்டோ பிரதி, பதிவுத் தபால் பற்றுச்சீட்டுடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியன சரியாகக் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை வலைதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுதல் பயன்மிக்கதாக இருக்கும். அனுமதிப்பத்திரத்தை பரீட்சித்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்துடன் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவுடன் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கமைய குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின்போது திருத்தத்திற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

11.2 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் தேவைக்கேற்ப ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி விண்ணப்பத்தை சமர்ப்பித்த மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியை மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

11.3 பரீட்சைக்குத் தோற்றிய மொழி நியமன மொழியாகக் கருதப்படும்.

11.4 இந்தப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை 2026 யூலை மாதத்தில் நடாத்தப்படும்.

12. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்:

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கின்ற எவரையும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கக்கூடாது. மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் உள்நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சையை நடாத்தும் அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டுகொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும். இது தவிர, பரீட்சை தொடர்பாக தேவைப்படுகின்ற ஏனைய அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதிப்பத்திரம் ஊடாக தங்களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சை தொடர்பான இந்த விதிமுறைகளுக்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதித்துக்கொள்ளல்/ அனுமதித்துக்கொள்ளாமல் வெளியேற்றுகின்ற அதிகாரம் பரீட்சை மேற்பார்பார்வையாளருக்கு உண்டு.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

14. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும்பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கியிருத்தல் வேண்டும்.

எம்.எம்.ஆனந்த விஜித்த குமார மாப்பா,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இலக்கம் : 1114,
பன்னிபிட்டிய வீதி,
தலவத்துகொட,
2026, ஏப்பிறல் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத / தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி:
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss ..........................................................................................
..........................................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ- ம்: Mr./Mrs./Miss SILVA A.B.

1.2 முழுப் பெயர் : ..........................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................
1.3 முழுப் பெயர் :..........................................................................
(சிங்களத்தில் /தமிழில்) ..........................................................................

02. 2.1 நிரந்தர முகவரி: ..........................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................
2.2 நிரந்தர முகவரி: ..........................................................................
(சிங்களத்தில் /தமிழில்) ..........................................................................

03. 3.1 பிறந்த திகதி:
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது : வருடங்கள்: ......... மாதங்கள் : ..........நாட்கள் : ...........

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

05. பாலினம்: ஆண் - 0 பெண் - 1 | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

06. விவாக நிலை: (விவாகமானவர் – 1, விவாகமாகாதவர் - 2) | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

07. தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

08. மின்னஞ்சல் முகவரி (email address) : ...............................................

09. தகைமைகள் :

9.1 கல்வித் தகைமைகள் :
..........................................................................
..........................................................................
..........................................................................

9.2 தொழில் தகைமைகள் :
..........................................................................
..........................................................................
..........................................................................

10. தாங்கள் குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?..............................................................
(குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும்):
..........................................................................
..........................................................................

11. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :

11.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை : ..........................................................
11.2 பற்றுச் சீட்டு இலக்கம், திகதி : ..........................................................
11.3 செலுத்திய தொகை ரூபா : ..........................................................

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு தகவல் பொய்யானது என நியமனம் செய்யப்படுவதற்கு

முன்னர் தெரியவரின், நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் எனக்கு எந்த விதமான இழப்பீட்டையும் செலுத்தாமல் நான் பணி நீக்கத்திற்கு ஆளாகுவேன் என்பதனை அறிவேன் எனவும், அனைத்து சட்ட விதிகளுக்கும் நான் உட்படுகின்றேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

திகதி :....................................... ..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணபத்தை முன்வைக்கின்ற ………………………………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ……………………… ஆம் திகதி அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அந்த பற்றுச் சீட்டை இங்கு விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................................

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி:................................................

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர்: :.........................................................................................

பதவி: :.........................................................................................

முகவரி: :.........................................................................................

(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்)

14. ஏற்கனவே அரச / மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு (தேவையற்ற வசனங்களை வெட்டி விடவும்) இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு. / திருமதி / செல்வி .......................................................................................... என்பவர்……………………………………........ (நிறுவனம்) இல் பணியாற்றுகின்றார் எனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், வேலை மற்றும் வருகை திருப்திகரமானதெனவும், அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லையெனவும், இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவிப் பெயர்
(பதவி முத்திரை)

திகதி:.........................................

4-354/1

---

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத / தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026**

01. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத / தொழில்நுட்பம்சார் சேவை வகுதிக்குரிய இலங்கை தொழில்நுட்ப சேவையின் ஐந்து (05) தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.05.25 ஆகும்.

03. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN-03 -2025 இற்குரித்தான ரூபா 52,250.00 –10x800 – 11x1,190 – 10x1,320 – 10x1,350 – ரூபா 100,040.00 சம்பள அளவுத்திட்டம் ஏற்புடையதாகும்.

04. ஆட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள் (III ஆம் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்த்துக்கொள்ளல்) :

4.1 **கல்வித் தகைமைகள்:**

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.2 **தொழில் தகைமைகள் :**

I. மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்). அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ் (சிவில்). அல்லது

III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்). அல்லது

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பம் டிப்ளோமா (சிவில்). அல்லது

V. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் (சிவில்) பரீட்சையில் 1 ஆம் பகுதியை சிறப்பாக நிறைவு செய்திருத்தல். அல்லது

VI. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் பயிற்சி தகைமை (NVQ – 06) மட்டத்தை (சிவில்) நிறைவு செய்திருத்தல். அல்லது

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுனங்களிடம் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில் நுட்ப தகைமைகளைப் (சிவில் பிரிவில்) பெற்றிருத்தல்.

4.3 **சேவை அனுபவம் :**

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் ஆரம்ப நிலை அல்லது அதனிலும் உயர் மட்ட சேவை வகுதியில் திணைக்கள மயப்படுத்தப்பட்ட நிரந்தரப் பதவியொன்றில் தொடர்புடைய துறையில் விண்ணப்ப முடிவு திகதியன்று குறைந்தது 05 வருட கால முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு:

திருப்திகரமான சேவைக்காலம் என்பது உடன் முந்திய 05 வருட காலப் பகுதியினுள் உழைத்துக்கொள்ள வேண்டிய அனைத்து சம்பளவேற்றங்களையும் உழைத்திருத்தல் மற்றும் உடன் முந்திய 05 வருட காலப் பகுதியினுள் எந்த விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டிருக்காமையாகும்.

4.4 **உடற் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்த வொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியாக தகுதி யுடையவராக இருத்தல் வேண்டும்.

4.5 **ஏனைய தகைமைகள் :**

i. விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியன்று பதவியில் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி, விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று சகல தகைமை களையும் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வ தற்கான எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்று வதற்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

05. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

i. ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்று வதற்கு இணக்கம் தெரிவித்தல் வேண்டும்.
ii. இப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித் துடையதாகும்.
iii. இந்தப் பதவி ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

06. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை :**

விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப் பதாரிகளிடையே நியமன அதிகாரி தீர்மானிக்கும் எண்ணிக்கையை சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தகைமைகளை பரீசித்ததன் பின்னர் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில்

நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும். சாதாரண நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லையென்பதோடு, அடிப்படைத் தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

6.1 எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :

பரீட்சை பிரதானமாக 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

| *வினாத்தாள்* | | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. | நுண்ணறிவு சோதனை | 01 மணித்தியாலம் | 100 | 50% |
| 2. | விடயம் சார்ந்த தொழில்நுட்ப சோதனை | 01 மணித்தியாலம் | 100 | 50% |

6.2 **பாடத்திட்டம்**:

i. **நுண்ணறிவு சோதனை** : பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியிலான சிந்திக்கும் திறன், பகுப்பாய்வு சிந்தனை, தீர்மானமெடுக்கும் திறன் ஆகியவற்றை சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

ii. **விடயம் சார்ந்த தொழில்நுட்ப சோதனை :** அடிப்படைக் கணித அறிவு மற்றும் அடிப்படை சிவில் பொறியியல் சார்ந்த அறிவை சோதிப்ப தற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

07. **மொழித் தேர்ச்சி** :

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற் கமைவானதாகும்.

08. **தரங்களுக்கான பதவியுயர்வு** :

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற் கமைவானதாகும்.

09. **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி யடைதல்** :

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற் கமைவானதாகும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**:

10.1 விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணபப்படிவத் திற்கமைய A4 அளவிலான தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பதாரி தனது கையெழுத்தினால் தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணபப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப் பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பமொன்று காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணபத்தின் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்.

10.2 விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற மொழியிலேயே விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

10.3 சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.05.25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலக்கம்: 1114, பன்னிபிட்டிய வீதி, தலத்துகொட எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. **பரீட்சை நிபந்தனைகள்:**

11.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்பங்களை கையேற்ப தற்கான இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித் துள்ள விண்ணப்பதாரிகளுக்கு தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத் தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் தபாலில் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது பற்றி தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டு www.dncws.lk வலைதளத்தில் வலைதள அறிவித்தலொன்றின் ஊடாக அறிவிக்கப்படும்.

அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணப்ப தாரியொருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள பிரகாரம் அது தொடர்பாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவிடம் விசாரித்தறிதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தம்மிடம் வைத்திருக்கும் விண்ணப் பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய தற்கான பற்றுச் சீட்டின் போட்டோ பிரதி, பதிவுத் தபால் பற்றுச்சீட்டுடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியன சரியாகக் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை வலைதள அறிவித் தலில் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுதல் பயன்மிக்கதாக இருக்கும். அனுமதிப்பத்திரத்தை பரீட்சித்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்துடன் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவுடன் தொடர்புகொண்டு விண்ணப்பத் திற்கமைய குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின்போது திருத்தத்திற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

11.2 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் தேவைக்கேற்ப ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி விண்ணப்பத்தை சமர்ப்பித்த மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியை மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

11.3 பரீட்சைக்குத் தோற்றிய மொழி நியமன மொழி யாகக் கருதப்படும்.

11.4 பரீட்சைக் கட்டணம் ரூ. 2000.00 ஆகும். பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலங்கை வங்கி, தலவத்துகொட கிளை, கணக்கு இலக்கம் 7040440 வரவு வைக்கப்படும் வகையில் நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமாக இருக்கும். எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

11.5 இந்தப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை 2026 யூலை மாதத்தில் நடாத்தப்படும்.

12. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வை யாளர் திருப்திப்படும் வகையில் தனது ஆளடை யாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கின்ற எவரையும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கக்கூடாது. மேலும், பரீட்சைமண்டபத்திற்குள் உள்நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சையை நடாத்தும் அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டுகொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும். இது தவிர, பரீட்சை தொடர்பாக தேவைப்படுகின்ற ஏனைய அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதிப்பத்திரம் ஊடாக தங்களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சை தொடர்பான இந்த விதிமுறைகளுக்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதித்துக்கொள்ளல்/ அனுமதித் துக்கொள்ளாமல் வெளியேற்றுகின்ற அதிகாரம் பரீட்சை மேற்பார்பார்வையாளருக்கு உண்டு.

13. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கியிருத்தல் வேண்டும்.

எம்.எம்.ஆனந்த விஜித்த குமார மாப்பா,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இலக்கம் : 1114,
பன்னிபிட்டிய வீதி,
தலவத்துகொட.
2026, ஏப்பிறல் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத / தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026**

எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி:

சிங்களம் - 1

தமிழ் - 2

ஆங்கிலம் - 3

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss ..........................................................................

.............................................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ- ம்: Mr./Mrs./Miss SILVA A.B.

1.2 முழுப் பெயர் : ..........................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................................

1.3 முழுப் பெயர் : ..........................................................................................................

(சிங்களத்தில் /தமிழில்) ..........................................................................................................

02. 2.1 முகவரி (தனிப்பட்ட) : ..........................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................................

2.2 முகவரி (தனிப்பட்ட) : ..........................................................................................................

(சிங்களத்தில் /தமிழில்) ..........................................................................................................

2.3 முகவரி (கடமை) : ..........................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................................

2.4 முகவரி (கடமை) : ..........................................................................................................

(சிங்களத்தில் /தமிழில்) ..........................................................................................................

(முகவரியில் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அறிவித்தல் வேண்டும்)

2.5 தொலைபேசி இல. (தனிப்பட்ட) | | | | | | | | | | |

2.6 தொலைபேசி இல. (கடமை) | | | | | | | | | | |

2.7 மின்னஞ்சல் முகவரி (email address ) : ..............................................

03. 3.1 பிறந்த திகதி:

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது : வருடங்கள்: ......... மாதங்கள் : .........நாட்கள் : ..........

04. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. பாலினம்: ஆண் - 0 பெண் - 1 : ☐

06. விவாக நிலை: (விவாகமானவர் – 1, விவாகமாகாதவர் - 2) : ☐

07. தகைமைகள் :

7.1 தொடர்புடைய கல்வித் தகைமைகள் :
............................................................................................................................................................
............................................................................................................................................................
.............................................................................................................................

7.2 தொழில் தகைமைகள் :
............................................................................................................................................................
............................................................................................................................................................
.............................................................................................................................

7.3 சேவை அனுபவம் :

i. தற்போது வகிக்கும் பதவி : ..............................................................................

ii. அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி : ....................................................................

iii. அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி: ...............................................................

iv. தற்போதைய தரம் : ............................................................................

v. அந்த தரத்திற்கு நியமிக்கப்பட்ட / பதவியுயர்த்தப்பட்ட திகதி : .........................................

vi. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் தற்போது வகிக்கின்ற பதவியில் நியமிக்கப்பட்ட / பதவியேற்ற திகதி : ...................................................................

vii. 2026.05.25 ஆம் திகதியன்று தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் தற்போது வகிக்கின்ற பதவியில் சேவைக்காலம் : ............................................................................

08. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :

11.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை : ........................................................
11.2 பற்றுச் சீட்டு இலக்கம், திகதி : ...................................................................................
11.3 செலுத்திய தொகை ரூபா : ...............................................................................................

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

வர்த்தமானி அறிவித்தலில் 4.3 ஆம் பந்திக்கமைய ………………… ஆம் திகதியன்று முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருப்பதாகவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நான் ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகாதிருப்பதாகவும் வெளிப்படுத்துகின்றேன்.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு தகவல் பொய்யானது என நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின், இந்த விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுமெனவும், நியமனம் செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எந்த விதமான இழப்பீட்டையும் செலுத்தாமல் என்னை பணியிலிருந்து நீக்குவதற்கு முடியுமென்பதனையும் அறிவேன்.

திகதி :........................ .............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் : (விண்ணப்பதாரியின் தனிப்பட்ட கோவைக்கமைய)

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவர் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் ……………………………………… பதவியில் பணியாற்றுவதாகவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நான் ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகவில்லையெனவும், வர்த்தமானி அறிவித்தலில் 4.3 ஆம் பந்திக்கமைய ………. (ஐந்து / பத்து) வருட கால முனைப்பான சேவைக் காலத்தைக் கொண்டிருப்பதாகவும், குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ளாரெனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அந்த பற்றுச் சீட்டை இங்கு விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் / முடியாதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பெயர் :........................................
பதவி :........................................
திகதி :........................................

(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

…………………………………………..

04-354/2

---

### தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

### தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கள / அலுவலக பிரிவு 1 சேவை வகுதியின் சமூகவியலாளர் தரம் II பதவிக்கு (திணைக்கள மயப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

01. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கள / அலுவலக அலுவலர் பிரிவு 1 சேவை வகுதியின் சமூக வியலாளர் தரம் II (திணைக்கள மயப்படுத்தப்பட்ட) இரண்டு (02) பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப் படையில் கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண் டுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.05.25 ஆகுமென்பதோடு, அன்றைய திகதியன்று விண்ணப்பதாரிகளின் வயது 21 வயதுக்குக் குறை யாதிருத்தல் வேண்டும். உச்சளவு வயதெல்லை ஏற்பு டையதாகாது.

03. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN- 06 -2025 இற்குரித்தான ரூ. 62,230 – 10x1,190 – 11x1,360 – 15x1,670 – 114,140.00 சம்பள அளவுத் திட்டம் ஏற்புடையதாகும்.

04. ஆட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள் :-

4.1 **கல்வித் தகைமைகள்:**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து சமூக விஞ்ஞானப் பாடப் பிரிவு உள்ளடங்கிய பட்டம்.

மற்றும்

ii. பட்டப்பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

4.2 **சேவை அனுபவம் :**

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் இரண்டாம் நிலை மட்டப் பதவியொன்றில் விண்ணப்ப முடிவு திகதியன்று குறைந்தது உடன் முந்திய 05 வருட கால முனைப்பான மற்றும் திருப்தி கரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு:

திருப்திகரமான சேவைக்காலம் என்பது உடன் முந்திய 05 வருட காலப் பகுதியினுள் உழைத்துக்கொள்ள வேண்டிய அனைத்து சம்பள வேற்றங்களையும் உழைத்திருத்தல் மற்றும் உடன் முந்திய 05 வருட காலப் பகுதியினுள் எந்த விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டிருக்காமையாகும்.

4.3 **உடற் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்த வொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியாக தகுதி யுடையவராக இருத்தல் வேண்டும்.

4.4 **ஏனைய தகைமைகள் :**

i. விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியன்று பதவி யில் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடு களுக்கமைய ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகாதிருத்தல்.

iii. விண்ணப்பதாரி, விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று சகல தகைமை களையும் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வ தற்கான எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்று வதற்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

05. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**:

i. ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்று வதற்கு இணக்கம் தெரிவித்தல் வேண்டும்.

ii. இப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித் துடையதாகும்.

iii. இந்தப் பதவி ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

06. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்ப தாரிகளிடையே நியமன அதிகாரி தீர்மானிக்கும் எண்ணிக்கையை சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தகைமைகளை பரீட்சித்ததன் பின்னர் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும். சாதாரண நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லையென்பதோடு, அடிப்படைத் தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

6.1 **எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

பரீட்சை பிரதானமாக 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

| *வினாத்தாள்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடை வதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு சோதனை | 01 மணித்தி யாலம் | 100 | 50% |
| 2. விடயம் சார்ந்த அறிவு பற்றிய சோதனை - சமூக விஞ்ஞானம் | 01 மணித்தி யாலம் | 100 | 50% |

6.2 பாடத்திட்டம்:

i. **நுண்ணறிவு சோதனை** : பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியிலான சிந்திக்கும் திறன், பகுப்பாய்வு சிந்தனை, தீர்மானமெடுக்கும் திறன் ஆகிய வற்றை சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

ii. **விடயம் சார்ந்த அறிவு பற்றிய சோதனை - சமூக விஞ்ஞானம் :** சமூக வலுவூட்டல், பொருளாதாரம் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணல், பகுப்பாய்வு மற்றும் தீர்வுகளைக் கண்டறிதல், விடய ஆய்வு, பங்கேற்பு அபிவிருத்தி, சமூக விஞ்ஞானம் சார்ந்த தகவல்கள் உள்ளடங்கிய கணக்கெடுப்புக்களைத் திட்டமிடல் உள்ளிட்ட சமூக விஞ்ஞானம் சார்ந்த அறிவு மற்றும் அதன் நடைமுறை

சார்ந்த பயன்பாடுகளை சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

07. **அரச கரும மொழித் தேர்ச்சி :**

அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்து கொண்ட அலுவலர்கள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலப் பகுதியில் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதோடு 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கமைய தொடர்புடைய மட்டத்திலான மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

08. **தரங்களுக்கான பதவியுயர்வு** :

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கள / அலுவலக அலுவலர் - பிரிவு 1 சேவை வகுதியின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைவானதாகும்.

09. **வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் :**

தரம் II இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு 03 வருடங் களுக்குள் 1 ஆவது வினைத்திறன் தடை தாண்டலிலும் தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்டு 05 வருடங்களுக்குள் 2 ஆவது வினைத்திறன் தடை தாண்டலிலும் சித்தி யடைதல் வேண்டும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்:**

10.1 விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணபப்படிவத் திற்கமைய A4 அளவிலான தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பதாரி தனது கையெழுத்தினால் தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணபப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பூரண மற்ற தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்ப மொன்று காணாமற்போதல் அல்லது தாமத மடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்.

10.2 விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர் பார்க்கின்ற மொழியிலேயே விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

10.3 சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.05.25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "சமூகவியலாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலக்கம் :1114, பன்னிபிட்டிய வீதி, தலத்துகொட எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. **பரீட்சை நிபந்தனைகள்:**

11.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்பங்களை கையேற்ப தற்கான இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித் துள்ள விண்ணப்பதாரிகளுக்கு தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத் தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் தபாலில் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது பற்றி தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டு www.ducws.lk வலைதளத்தில் வலைதள அறிவித்தலொன்றின் ஊடாக அறிவிக்கப்படும். அனுமதிப்பத்தரம் கிடைக்கப்பெறாத விண்ணப் பதாரியொருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள பிரகாரம் அது தொடர்பாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவிடம் விசாரித்தறிதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தம்மிடம் வைத் திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் போட்டோ பிரதி, பதிவுத் தபால் பற்றுச்சீட்டுடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள

அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியன சரியாகக் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடித மொன்றை வலைதள அறிவித்தலில் குறிப்பிடப் பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுதல் பயன்மிக்கதாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தை பரீட்சித்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத் துடன் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கமைய குறித்த திருத்தங் களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்ட பத்தில் / நேர்முகப் பரீட்சையின்போது திருத்தத் திற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

11.2 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் தேவைக்கேற்ப ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி விண்ணப்பத்தை சமர்ப்பித்த மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். விண்ணப் பதாரி தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியை மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

11.3 பரீட்சைக்குத் தோற்றிய மொழி நியமன மொழி யாகக் கருதப்படும்.

11.4 பரீட்சைக் கட்டணம் ரூ. 2000.00 ஆகும். பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலங்கை வங்கி, தலவத்துகொட கிளை, கணக்கு இலக்கம் 7040440 வரவு வைக்கப்படும் வகையில் நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமாக இருக்கும். எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

11.5 இந்தப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை 2026, யூலை மாதத்தில் நடாத்தப்படும்.

12. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வை யாளர் திருப்திப்படும் வகையில் தனது ஆளடை யாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்:

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கின்ற எவரையும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கக்கூடாது. மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் உள்நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சையை நடாத்தும் அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டுகொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும். இது தவிர, பரீட்சை தொடர்பாக தேவைப்படுகின்ற ஏனைய அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதிப்பத்திரம் ஊடாக தங்களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சை தொடர்பான இந்த விதிமுறைகளுக்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதித்துக்கொள்ளல்/ அனுமதித்துக்கொள்ளாமல் வெளியேற்றுகின்ற அதிகாரம் பரீட்சை மேற்பார்பார்வையாளருக்கு உண்டு.

13. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கியிருத்தல் வேண்டும்.

எம்.எம்.ஆனந்த விஜித்த குமார மாப்பா,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இலக்கம் : 1114,
பன்னிபிட்டிய வீதி,
தலவத்துகொட,
2026, ஏப்பிறல் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கள / அலுவலக பிரிவு I சேவை வகுதியின் சமூகவியலாளர் தரம் II பதவிக்கு (திணைக்கள மயப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026**

எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி:

சிங்களம் - 1

தமிழ் - 2 ☐

ஆங்கிலம் - 3

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss ..............................................................................................
..............................................................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ- ம்: Mr./Mrs./Miss SILVA A.B.

1.2 முழுப் பெயர் : ...............................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ...................................................................................................

1.3 முழுப் பெயர் : ...............................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்) ...............................................................................................................

02. 2.1 முகவரி (தனிப்பட்ட) :.....................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ...................................................................................................

2.2 முகவரி (தனிப்பட்ட) :.....................................................................................................................
(சிங்களத்தில் /தமிழில்) ...............................................................................................................

2.3 முகவரி (கடமை) : ........................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ...................................................................................................

2.4 முகவரி (கடமை) :........................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்) ...............................................................................................................
(முகவரியில் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அறிவித்தல் வேண்டும்)

2.5 தொலைபேசி இல. (தனிப்பட்ட)

2.6 தொலைபேசி இல. (கடமை)

2.7 மின்னஞ்சல் முகவரி (email address) :..............................................

03. 3.1 பிறந்த திகதி:

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது : வருடங்கள்: ......... மாதங்கள் : ..........நாட்கள் : ...........

04. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. பாலினம்: ஆண் - 0 பெண் - 1 ☐

06. விவாக நிலை: (விவாகமானவர் – 1, விவாகமாகாதவர் - 2) ☐

07. தகைமைகள் :

7.1 தொடர்புடைய கல்வித் தகைமைகள் :

..............................................................................................................................................................
..............................................................................................................................................................
..............................................................................................................................................

7.2 தொழில் தகைமைகள் :
..................................................................................................................................................................
..................................................................................................................................................................
...........................................................................................................................................

7.3 சேவை அனுபவம் :
i. தற்போது வகிக்கும் பதவி : .............................................................................
ii. அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி : .....................................................................
iii. அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி: ..............................................................
iv. தற்போதைய தரம் : .........................................................................
v. அந்த தரத்திற்கு நியமிக்கப்பட்ட / பதவியுயர்த்தப்பட்ட திகதி : .........................................
vi. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் தற்போது வகிக்கின்ற பதவியில் நியமிக்கப்பட்ட / பதவியேற்ற திகதி : ...................................................................
vii. 2026.05.25 ஆம் திகதியன்று தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் தற்போது வகிக்கின்ற பதவியில் சேவைக்காலம் : ..........................................................................

08. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :
11.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை : ..........................................................
11.2 பற்றுச் சீட்டு இலக்கம், திகதி : ..............................................................................................
11.3 செலுத்திய தொகை ரூபா : ........................................................................................................

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும். |

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

வர்த்தமானி அறிவித்தலில் 4.3 ஆம் பந்திக்கமைய ………………… ஆம் திகதியன்று முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருப்பதாகவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நான் ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகாதிருப்பதாகவும் வெளிப்படுத்துகின்றேன். இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு தகவல் பொய்யானது என நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின், இந்த விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுமெனவும், நியமனம் செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எந்த விதமான இழப்பீட்டையும் செலுத்தாமல் என்னை பணியிலிருந்து நீக்குவதற்கு முடியுமென்பதனையும் அறிவேன்.

திகதி :............................ .............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் : (விண்ணப்பதாரியின் தனிப்பட்ட கோவைக்கமைய)

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவர் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் ……………………………………… பதவியில் பணியாற்றுவதாகவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நான் ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகவில்லையெனவும், வர்த்தமானி அறிவித்தலில் 4.3 ஆம் பந்திக்கமைய ……….. (ஐந்து /பத்து) வருட கால முனைப்பான சேவைக் காலத்தைக் கொண்டிருப்பதாகவும், குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ளாரெனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அந்த பற்றுச் சீட்டை இங்கு விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் / முடியாதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பெயர்:......................................
பதவி :......................................
திகதி:........................................
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

04-354/3

**விவசாயம், கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சு**

**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

**நில அளவையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2026**

நில அளவையாளர் நாயகத்தால், உத்தரவு பெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்குரிய சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை மற்றும் வதிவிடம் என்பன கருத்திற் கொண்டு நாடலாவிய ரீதியில் பல இடங்களிலும் கொழும்பிலும் இடம்பெறவுள்ளது. இப் பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.

பகுதி 1- ஆள்கூற்றுப் பத்திரம் தயாரித்தல்
பகுதி 11- வரைபடம் வரைதல்

2. பரீட்சையின் முதலாவது பாகம் 2026, யூலை 25 ஆம் திகதியும், இரண்டாவது பாகம் 2026, ஒற்றோபர் 24 திகதியும் நடைபெறவுள்ளது. முதற் பகுதிப் பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் இரண்டாவது பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில், பகுதி 1 மற்றும் பகுதி 11 ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியு மென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும்.

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள்கூற்றுத் தாள் ஒன்றைச் சரியாக தயார் செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள்கூறுகளைக் கணித்தல்.

(ஆ) ஊயுனு மென்பொருள் மற்றும் ஆயத்தொலைவு களைப் பயன்படுத்தி துல்லியமாக வரைபடத்தை வரைவதற்கு, பரப்பளவைக் கணக்கிடுவதற்கு, Microsoft Excel மற்றும் Microsoft word என்பனவற்றை பயன்படுத்தி மாதிரிக்கமைய கட்டுமான ஆய்வு அறிக்கை எழுதுவதற்கு மற்றும் வழங்கப்பட்ட வரைபடத்தை இலக்கமிடல் அசல் பரிமாணத்திற்கு ஏற்ப தயாரித்து அச்சிடுவதற்கு, பிரித்தானிய அலகுகள் முறையின் கீழ் உள்ள வரைபடத்தை கேட்கப்படும் ஒரு மெட்ரிக் பரிமாணத்திற்கு ஏற்ப பெரிதாக்கவோ சுருக்கவோ செய்து, ஒத்திரேகப்படுத்துவதற்கும் இயலுமாதல்

4. **பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகள்:**

(அ) தேசிய கல்விச் சான்றிதழ் தேர்வில் அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு சிறப்பு சித்திகளுடன் (02) ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

மற்றும்

(ஆ) அரசு தொழில்நுட்பக் கல்லூரி அல்லது பிற அரை அரசு நிறுவனத்தில், வடிவமைப்பு தொடர்பான ஒரு வருடத்திற்குக் குறையாத படிப்பை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.

5. **பரீட்சைக் கட்டணம் :**

5.1 முதலாம் பகுதி தேர்விற்கான கட்டணம் ரூ. 1200.00. ஆகும். நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் காசாளர் முகப்பில், ஏதேனும் மாவட்ட நில அளவை அலுவலகம் அல்லது தியத்தலாவை நில அளவை மற்றும் வரைபட நிறுவனத்தில் அல்லது https://govpay.lk ஊடாக செலுத்த வேண்டும். மேலும் பெறப்பட்ட ரசீது விண்ணப்பப் படிவத்தில் அதற்காக வழங்கப்பட்ட இடத்தில் கழறாத வகையில் ஒட்டப் பட வேண்டும். (ரசீதின் நகல் ஒன்றை எதிர்கால தேவைக்காக வைத்திருத்தல் அவசியம்). தேர்வுக் கட்டணம் பண ஆணை அல்லது முத்திரை அல்லது காசோலை மூலம் ஏற்றுக்கொள்ளப்படாது. ரசீது இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5.2 இரண்டாம் பகுதி தேர்விற்கான தேர்வு கட்டணம் ரூ. 6800.00. முதலாம் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு (இரண்டு பாடங்களிலும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 60% ஆக இருத்தல் வேண்டும்.) எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்படும். முதலாம் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தி பகுதி II தேர்விற்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்:**

இந்த அறிவிப்பின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி, 21 செ.மீ. x 29 செ.மீ (A4) அளவுள்ள தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை கீழே உள்ள முகவரிக்கு தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

தயவுசெய்து தபால் உறையின் மேல் இடது மூலையில் 'நில அளவையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2026' எனக்குறிப்பிடவும்.

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சைகள்)
பரீட்சைப் பிரிவு
நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகம்
தபால் பெட்டி 506
கொழும்பு 05.

கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள், முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. எக் காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக் கப்படமாட்டாது.

8. 2026 ஆம் ஆண்டு மே மாதம் 29ம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. (I) வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள், ஆள் கூறுகளைக் கணிக்க உதவும் கணிதவாய்ப்பாடுகள் மற்றும் விண்ணப்ப தாரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற் றையும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற் பார்வையாளரின் அனுமதி யுடன் சாதாரண அறிவியல் கணிப் பொறிகள் பாவிக்க அனுமதிக்கப்படும்.

இரண்டாம் பரீட்சைக்கு அவசியமான அச்சுத் தாள்கள் மற்றும் அச்சு இயந்திரங்கள் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். CAD மென்பொருள், Microsoft Excel மற்றும் Microsoft Word உடைய மடிக்கணினிகள், மென்பொருள்கள் இல்லாத கணிக்கருவி (கால்குலேட்டர்) மற்றும் ஏனைய தேவை மற்றவை உபகரணங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

10. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமளவுக்கு தனது ஆள் அடையாள த்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம்.

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப் பட்ட அடையாள அட்டை;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச் சீட்டு;

(அ) நபர்களைப் பதிவு செய்வதற்கான ஆணை யரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் வெளிநாட்டு பாஸ் போர்ட்;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தை கொண்டதுமான ஏதாவ தொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச் சீட்டு.

(ஈ) மேலே உள்ள 10 (i) இன் படி தனது அடை யாளச் சான்றினைச் நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

4. இந்தத் தேர்வு மெட்ரிக் அலகு முறையின் கீழ் நடத்தப்படும்.

பீ. கே. எல். எஸ். பண்டுவாவல,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
த.பெ.இ. – 506,
கொழும்பு - 05,
2026.04.23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை நில அளவைத் திணைக்களம்

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2026

சுட்டிலக்கம் [ ]
(அலுவலக பயன்பாட்டிற்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு./திருமதி/செல்வி..............................................................
(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர்: ...............................................................................
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்): Mr./Mrs./Miss ..........................................................................

(ஆ) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் ...........................................

பால்: ..........................................................

(இ) பதவி: ................................................................

(ஈ) தொழில் முகவரி: ........................................................................................................

(உ) நிரந்தர முகவரி: .............................................................................................................................................
........................................

கையடக்கத் தொலைபேசி இலக்கம் :.....................................................

(ஊ) பிறந்த திகதி:...............................................

(எ) கல்வித் தகைமைகள்: ........................................

(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி:- (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

(உ) நீங்கள் பகுதி I அல்லது பகுதி II க்கு வருகை தருகிறீர்களா என்பதை குறிப்பிடுக (II பரீட்சைக்கு தோற்றுவதற்கு I பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அவசியம்)

(ஐ) செலுத்திய கட்டணம்: ரூபா..................................

(ஒ) காசுக் கட்டளை இலக்கம் / பற்றுச் சீட்டிலக்கம்: ........................................................................

வழங்கிய அலுவலகம்: ....................

திகதி:- .................................

| |
|---|
| உங்களால் மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கோ அல்லது தியத்தலாவ அளவையியல் படமாக்கல் நிறுவனத்திற்கு பணம் செலுத்தி அல்லது https://govpay.lk நிகழ்நிலை ஊடாக பணத்தை செலுத்தி பெற்ற பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இங்கு ஒட்டவும்) |

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும், உண்மையானதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் :- ..................

திகதி:- ..................

04-372

## திருத்தம்

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

இலக்கம் 2,463 மற்றும் 2025, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதியிட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட “இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025” எனும் அறிவித்தலின் 2.1 ஆம் பந்தியின் விதிமுறைகளுக்கு அமைவாக, குறித்த காலப்பகுதிக்குள் நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்திருந்தும், தரவிறக்கம் செய்யப்பட்ட அவ்விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்காத காரணத்தினால் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள், 2026.05.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சரியாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியை “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை” எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இதன் போது புதிய விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க முடியாது என்பதோடு, 2026.01.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, உரிய பரீட்சை கட்டணங்களைச் செலுத்திய பின்னர் அவ்விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதிகளைத் தம்வசம் வைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே தமது விண்ணப்பப் படிவத்தின் அச்சுப்பிரதியைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்காக இச்சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. பரீட்சை நடத்தப்படும் திகதி மற்றும் பரீட்சை அனுமதி அட்டைகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படும்.

2025, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 2,463 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2025, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 2,467 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி மற்றும் ஏனைய அனைத்து விடங்களும் மாற்றமின்றி அமையும்.

சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மொழி வசனங்களுடைக்கிடையே ஏதேனும் முரண்பாடு ஏற்படுமாயின், சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
பெலவத்தை, இசுருபாய,
2026.04.28.

04-411